

# தமிழக ஆளுநர் அவர்களின்

# தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து!

RAJ BHAVAN

GOVERNOR OF TAMILNADU

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மகிழ்ச்சியும் மங்களமும்
மிகுந்த தமிழ்ப் புத்தாண்டு
நன்னாளில் எல்லா இன்பமும்
வளமும் பெற்று இனிது வாழ
தமிழ் நாட்டு மக்களுக்கு
எனது இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்

தமிழக ஆளுநர் திரு கே.கே.ஷா அவர்கள்
தன் கைப்பட தமிழில் எழுதியுள்ள
புத்தாண்டு வாழ்த்து!

தமிழரசு

மலர்:6 * இதழ்:20 16-4-1976

# ஏழைகளின் இன்னல்களைக் குறைத்திடுவோம்



"நமது பொருளாதாரத் திட்டங்கள், ஏழைகளின் இன்னல்களைக் குறைத்து, நாட்டு முன்னேற்றப் பணியில் அவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது மாநில அரசுகளின் முழுமையான கடமையாகும். தொழிலாளர் பிரச்சினை, கிராமப் பாங்கு வசதி, கைத்தறித் துறை, பாசன வசதி, மின்சக்தி போன்ற துறைகளில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு, அவற்றிற்கு ஓரளவுக்குத் தீர்வும் காணப்பட்டுள்ளது. ஆண்டுத் திட்டம் பற்றி விவாதங்கள் நடத்தியபோது, பாசன வசதி, மின்சக்தித் துறை பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளது. நிலச் சீர்திருத்தம், கிராமச் சீரமைப்புத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட வேண்டும்.

### நிலச்சீர்திருத்தம்

"நிலச் சீர்திருத்தச் சட்டம் புதியது அல்ல. ஆனால் அது நமது பொருளாதாரச் சமூக முன்னேற்றத்திற்கு முக்கியமானதாகக் கருதப்பட்டதால், 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் மெத்தனம் காணப்படுகிறது. மாநில அரசுகள் இதைப் போக்க மேற்கொண்ட முயற்சிகள் போதுமானவை அல்ல. உபரி நிலத்தை ஆர்ஜிதம் செய்து, நிலமற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது, குறித்த கால அட்டவணைக்குள் நடைபெற வேண்டும். பல்வேறு மட்டங்களில் ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கைகளைத் தக்க நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

### சட்டங்களைச் சிக்கலானதாக ஆக்கக்கூடாது !

"சிறிய பிரச்சினைகள் ஒவ்வொன்றிற்கும் தீர்வு காணும் அவசரத்தில்—அரசு, சட்டங்களை மேலும் சிக்கலாக மாற்றி விடலாம். நியாயமாகவும், நேர்மையாகவும் பொது மக்களுக்காகப் பணிபுரியும்போது, சட்டங்களைச் சிக்கலாக்க வேண்டிய அவசியம் இல்லை. அரசு நெறிமுறைகள் மிகவும் எளிதாக இருக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள விதிமுறைகளை மேலும் எளிதாக்க வேண்டும். சட்டங்களில் சிக்கல்கள் அதிகரிக்க, அதிகரிக்க, பெரும் அளவுக்குக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

### உபரி நில விநியோகம்

"உபரி நிலத்தை விநியோகிப்பதில் குறியளவுகளை எய்தும் அவசரத்தில், வன நிலம், பொது நிலம் ஆகியவையும், கிராமச் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நிலமும் கூட விநி

யோசிக்கப்படுகின்றன. இந்த அலுவல், நிலச்சீர்திருத்த நடவடிக்கையின் கீழ் வராது. இத்தகைய அலுவல் சில சமயங்களில் நன்மைக்குப் பதிலாகத் தீமையையே ஏற்படுத்திவிடும். நிலச்சீர்திருத்த முறையைச் செயல்படுத்துவதில் உள்ளூர் வருவாய்த் துறை ஊழியர்களுக்கும், பெரிய நிலச்சுவான்தார்களுக்குமிடையே இரகசிய உறவு இருப்பது தெரிய வந்துள்ளது. நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அரசு ஊழியர்களாக இல்லாதவர்களைச் சேர்த்துக் கொள்வது நல்லதல்ல.

''நில உடைமை சம்பந்தமான விவரக்குறிப்பேடுகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுள்ளன. குறிப்பாக முன்னாள் மன்னர்கள் வாழ்ந்த மாநிலங்களில் இதைப் பொறுத்தவரையில் காணப்படும் போக்கு, மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. நில ஆய்வு மூலம் நில உடைமை சம்பந்தமான குறிப்பேடுகளைத் தயாரிப்பது தான் சிறந்தது. ஆனால், இதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும். அது வரை காத்திருந்து நிலச்சீர்த் திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துவது இயலாத காரியம். ஆகையால் தற்காலிக முறையொன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். இதுபற்றி முதலமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

### தற்காலிக ஏற்பாடுகள்

''சில சமயங்களில் சில விஷயங்களை நாம் திருத்தியமைக்க முயற்சிக்கிறோம். கிராமக் கடன் தொல்லையை நீக்க நாம் ஆர்வம் காட்டினோம். ஆனால் சில மாநிலங்களில் வீட்டு வாடகைப் பாக்கி, காண்டிராக்டர்கள் முதலாளிகளுக்கான ஊதிய முன் பணம் போன்றவற்றையும் சேர்த்துக் கொடுக்க வகை செய்யும் விதத்தில் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது முதலாளிகள் இத்தகைய முன் பணத்தைத் தருவது கிடையாது. ஆகையால் தொழிலாளர்களின் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. கிராமக் கடன் தொல்லையை நீக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படும் என அறிவித்த போது, நாம் இதைக் கருத்தில் கொள்ளவில்லை. மற்றவைகளைப் பொறுத்தமட்டில், சட்டங்களை உன்னிப்பாக ஆராய வேண்டும். அதிகப் பிரச்சினைகளை உருவாக்காமல் தீர்க்கும் வகையில் இந்த அலுவல் உதவ வேண்டும்.

''சட்டத்தின் கட்டுக்கோப்புக்குள் வரவேண்டிய துறைகளில் கூடபிரச்சினைகள்ஏற்பட்டுள்ளன. ஏனெனில், தற்காலிக ஏற்பாடுகள் எதையும் நாம் செய்யவில்லை. டில்லிக்கு அருகே செங்கற் சூளையில் பணிபுரிவோர் சம்பந்தமான பிரச்சினை அண்மையில் எனது கவனத்திற்கு வந்தது. இத்தகைய தொழிலாளர்களுக்கு உடனடி நிதி உதவி தேவைப்பட்டபோது, அவர்களுக்கு எங்கு செல்வது என்றே தெரியவில்லை. கிராமப் பாங்குகளின் கிளைகள் செயல்படத் துவங்கச் சிறிது காலம் பிடிக்கும். கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சிகள், மற்ற நிறுவனங்கள் இத்தகையோர்க்கு உதவ முன்வர வேண்டும்.

# பிரதமரின் பேருரை

### சூழ்நிலையைத் தவறாகப் பயன் படுத்தக்கூடாது!

''இத்தகையோர்க்கு உதவ மற்ற வழிகளும் இருக்கலாம். தற்போது உள்ள ஏஜென்சிகளுக்குக் கடன் உதவி அளிப்பதற்கான உரிமங்களை வழங்கலாம். ஆனால் சூழ்நிலையைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்கான தீவிர உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும். இது பற்றி முதலமைச்சர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

பழைய அடகு வட்டிக்காரர்களிடம் மீண்டும் பழங்குடியினரும், மற்றவர்களும் சிக்கிக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்பவில்லை. நிரந்தரமாக அவர்களுடைய இன்னல்களைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, தற்காலிக அடிப்படையில் அவர்களுக்கு உதவுவதற்கான வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

### நகர்ப்புற நில உச்சவரம்பு

''நகர்மிகவும் முக்கியமானதாகும். அதை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தாத மாநிலங்கள் இதில் விரைந்து செயல்பட வேண்டும். நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயலாக்கும்போது உள்ளூர் அரசு ஊழியர்கள் தங்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதைத் தவிர்க்கும் விதத்தில், நெறிமுறைகளை வகுக்க வேண்டும். இந்த வகையிலும் முதலமைச்சர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

''நகர்ப்புற நிலத்தை ஒதுக்கீடு செய்யும்போது தகுந்த நகரத் திட்ட அமைப்பு முறையையும், சாலை வசதியையும் திறந்தவெளி மைதான வசதிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த அலுவல், சிறு வீட்டு மனைகளில் கட்டடம் கட்டுவதற்குமுன் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படாது.

### உள்ளூர் தொழில்களுக்குப் புத்துணர்ச்சி

''கிராமப்புறப் பொருளாதாரத்தை மீண்டும் சிறக்கச் செய்வதில் திறமைமிக்கவர்களை அதிகமாக ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தை எல்லாரும் ஏற்றுக் கொள்வார்கள். கடன்வசதி, விவசாயத்திற்கான அடிப்படைப் பொருள்களை வழங்குவது, போன்ற துணை நடவடிக்கைகள் மூலம் நிலச்சீர்திருத்த அலுவலை பலப்படுத்த வேண்டும். விஞ்ஞான, தொழில் நுட்ப முறைகளைக் கடைப் பிடித்து உள்ளூர் தொழில்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க வேண்டும். மேலும் கல்வியையும் கிராமங்களில் பரப்ப வேண்டும். மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் மற்றொரு பிரச்சினையாகும்.

''கிராமப்புறச் சீரமைப்புப்பணியில் ஈடுபடும்போது சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டப் பணியையும் இணைக்க வேண்டும். இத்திட்டங்கள் யாவும் ஒருங்கிணைந்த திட்டங்களாகக் கருதப்பட வேண்டும்.

"மாநில அரசுகள் இதுவரை மேற்கொண்ட முன்னேற்றப் பணிகளுக்காக, அவற்றைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், மெத்தனமாக நடைபெறக் கூடாது என்பதையும், விரைந்து நாம் பல பணிகளை மேலும் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

—(புதுடில்லியில் 5-3-'76 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை).

# ஆளுநர் அறிவிப்பு



“மற்றவர்களுக்கு உதவக்கூடிய வகையில் தமிழ்நாட்டில் உணவு தானிய விளைச்சல் பிரமாதமாக இருக்கிறது'' என்று தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் அறிவித்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது இவ்வாறு அறிவித்த ஆளுநர் அவர்கள் மேலும் கூறியதாவது:

## சீரணி கலைக்கப்பட்டது

சீரணிப் படையைக் கலைத்துவிட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

உள்ளூர் தலைமைப் பயிற்சியையும், கிராமப்புறத் தொண்டினையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுதான் சீரணி தொடங்கப்பட்டது. கடந்த எட்டாண்டுகளில் சிறுசிறு வேலைகளை இப்படை செய்து முடித்திருக்கிறது.

சீரணிப் படை மேற்கொண்ட கட்டிட வேலைகளுக்குப் பாதித் தொகையை அரசாங்கமே உதவித் தொகையாக வழங்கியிருக்கிறது. மற்ற வேலைகளுக்கு மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையைத்தான் அரசு வழங்கி வந்திருக்கிறது.

## ஆண்டொன்றுக்கு ரூ. 14 இலட்சம் செலவு

இப்படையின் வேலைகள் அரசாங்கத்தின் தணிக்கைக்கு உட்பட்டவை.

இது அரசியல் சார்பில்லாமல் இருக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அது அப்படிச் செயல்படவில்லை. சீரணியில் ஆட்கள் சேர்க்கப்படுவதில் அரசியல் பாரபட்சம் இருந்திருக்கிறது. அமைப்பும் சரியாக இல்லை. இவர்கள் செய்துவந்த வேலைகளும் மிகச் சிறந்தவை என்று கூற முடியாது.

இவர்களுக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 14 இலட்சம் ரூபாய் செலவிட்டு வந்திருக்கிறது.

## கணக்கில் ஒழுங்கில்லை

தியாகம், மற்றும் தன்னிச்சையாக வேலை செய்வதில் உள்ள ஆர்வத்தைத் தற்சமயம் இப்படையினர் இழந்து வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தவிர, கிராமப்புறங்களில் சீரணிப் படையினர் செய்த வேலைகளுக்கு ஒழுங்கான கணக்குகளும் கிடையாது.

எனவே, ஏப்ரல் முதல் நாளில் இருந்து சீரணிப்படையைக் கலைத்துவிடுவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்தந்தக் குறிப்பிட்ட மாவட்டங்களில் வேறு பயனுள்ள காரியங்களுக்குச் செலவிடப்படும்.

## இளைஞர் அணி நிறுத்தப்படும்

இளைஞர் அணியில் மேற்கொண்டு இனி யாரையும் சேர்ப்பது இல்லை என்றும், இதுவரை சேர்க்கப்பட்டவர்களுக்கான நான்காண்டுப் பணி முடிந்ததும் அதனையும் நிறுத்திவிடுவது என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

1971-ல் இளைஞர் அணி தொடங்கப்பட்டது. நவீன விவசாய முறைகள் பற்றி பிரச்சாரம் செய்யவும், கால்நடை மருத்துவத்தில் உதவி செய்யவும் வேளாண்மைக் கருவிகளைச் செப்பனிடவுமான நோக்கங்களோடுதான் இந்த அணி ஆரம்பிக்கப்பட்டது.

இவர்களுக்கு ஆறுவார காலம் பயிற்சி தரப்பட்டு வந்தது. இந்தப் பயிற்சியும் அவர்களுக்குப் போதாது. அவர்கள் ஆற்றி வந்த பணியும் திருப்திகரமாக இல்லை. இந்தப் பணிக்கு ஆள் எடுப்பது 1975 மார்ச் மாதத்தோடு நிறுத்தப்பட்டுவிட்டது.

ஏற்கெனவே, முதன் முதலில் இந்த அணியில் சேர்ந்தவர்கள் நான்காண்டுகள் பணியாற்றியிருப்பதால், அதற்குப் பிறகு சேர்ந்தவர்களையும் நான்காண்டு காலப் பணி வரை அரசாங்கம் வைத்திருக்கும்.

## சலுகை

இளைஞர் அணியினர் அரசுப் பணிகளிலும் கிராமசேவகர்களாக சேரவும் சலுகை தரப்படும். அதற்கான தகுதிகள் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், வயதில் நான்காண்டுகள் சலுகை காட்டப்படும்.

இந்த அணியில் உள்ள பெண்கள் நர்சுகளாகவும், மருத்துவப் பெண்களாகவும் வேலையில் சேர முன்னுரிமை தரப்படும்.

## மாதச் சம்பளம்

தற்சமயம் 469 ஆண்களும், 80 பெண்களும் இளைஞர் அணியில் நான்காண்டுப் பணியை முடித்தவர்களாக இருக்கிறார்கள். இந்த அணியினருக்கு மாதம் ரூ. 175 வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

—இதைத் தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட பல்வேறு வினாக்களுக்கும் ஆளுநர் அவர்கள் விளக்கமளித்தார். அந்த விளக்கங்களின் விவரம் வருமாறு:

இந்த ஆண்டில் புதிய கல்லூரிகளோ, பள்ளிகளோ தொடங்கப்பட மாட்டாது.

அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களில் பெயர்களை மாற்றும் உத்தேசம் எதுவும் இதுவரை இல்லை.



## அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு

மாவட்டங்களுக்கு இடையே அரிசி, நெல் நடமாட்டக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமா என்று கேட்கப்படுகிறது.

அரிசி கொண்டு போவதற்கு மாவட்டத்திற்கு உள்ளே இருந்த கட்டுப்பாடு முன்பே நீக்கப்பட்டது. அது எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்பதைக் கவனித்து வருகிறோம்.

இது வெற்றி பெற்றால் மாவட்டங்களுக்கு இடையே உள்ள தடையை நீக்குவது பற்றியும் அரசு யோசிக்கும்.

மத்திய 'குவியலுக்கு'த் தமிழ்நாட்டிலிருந்து ஒன்றரை லட்சம் டன் அரிசி அனுப்பப்படும்.

# உணவுப் பொருள் வழங்குவதில் முறைகேடுகளைத் தடுத்திட புதிய அமைப்பு!

தமிழ்நாடு அரசின் நிறுவனமான நுகர்ப் பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளிலோ அல்லது அரசுச் சார்புடைய இதர உணவுப் பங்கீட்டுக் கடைகளிலோ உணவுப் பொருள் வழங்குவதில் முறைகேடுகள் ஏற்படுவதைத் தடுத்திட, தமிழ்நாடு அரசு தனி அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயல்பட்டு வரும் இந்த அமைப்பு, உணவுப் பங்கீட்டுக் கடைகள் சம்பந்தப்பட்ட புகார்களை உடனுக்குடன் விசாரித்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

உணவுப் பங்கீட்டுக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்கள் தரக்குறைவாக இருந்தாலோ அல்லது வழங்குவதில் ஏதேனும் முறைகேடுகள் நடந்தாலோ உடனடியாக சென்னை தியாகராய நகர், விஜயராகவாச்சாரி சாலை 2-ஆம் எண்ணிலுள்ள "புகார் பிரிவு" அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமோ, நேரிடையாகவோ அல்லது அஞ்சல் மூலமோ தெரிவிக்கலாம். பெறப்பெற்ற புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திட, இதற்கென நியமிக்கப் பெற்றுள்ள அலுவலர்கள் புகார்களுக்குரிய கடைகளுக்குச் சென்று சோதனை நடத்தி தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள். புகார்கள் பற்றி தெரிவிக்க செயல்படுகின்ற தொலைபேசி எண் 441441.

## அட்டைப்பட விளக்கம்

*எங்கெங்கு காணினும் உயர் விளைச்சல் ரகங்களே! இதன் பயனாய்த் தமிழ்நாட்டில் 1975–76-ஆம் ஆண்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி 78 இலட்சம் டன்னாகவும், அதில் அரிசி உற்பத்தி மட்டும் 61 இலட்சம் டன்னாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகையச் செழிப்பான நிலை இதுவரை இல்லை என்பதையும், இந்நிலை 1976–77-ஆம் ஆண்டில் மேலும் உயரும் என்பதையும் அட்டைப் படம் சொல்லாமல் சொல்லுகிறது.*

# ஆலோசகர் கருத்துரைகள்



"நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் மூலமாக நெய்வேலி அனல் மின்சார நிலையத்தை விரிவுபடுத்துவது பொருளாதார ரீதியாக அவசியமா என்பதைக் கண்டறிய ஆய்வு நடக்கிறது."

"நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் மின்சார உற்பத்திக்கு ஆகின்ற செலவை, தெற்கு மண்டலத்தில் உள்ள இதர மாநிலங்களில் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கும், அதனைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கும் ஆகின்ற செலவுடன் ஒப்பிடப்படும். பிற மாநிலங்களில் மின்சாரத்தை உற்பத்திச் செய்து, அதனைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஆகக்கூடிய செலவை விட, நெய்வேலி அனல் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு குறைவானது என்று தெரிய வருமானால் நெய்வேலி அனல் மின்சார நிலையம், இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் மூலம் விரிவுபடுத்தப்படும். எனவே நெய்வேலி அனல் மின்சார நிலையத்தை மேற்கொண்டு விரிவுபடுத்துவது, பொருளாதார உண்மைகளைப் பொறுத்ததாக இருக்கும்."

"தற்போது நெய்வேலி அனல் மின்சார நிலையம் 600 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடிய திறன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. நிறுவப்பட்ட இந்த உற்பத்தித் திறனில் சாத்தியமான அதிகபட்ச உற்பத்தியை எட்டிட, சுரங்கத்தை வலிமைப்படுத்தவும், விரிவு படுத்தவும் மத்திய அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது".

"புதிதாக இரண்டாவது சுரங்கம் ஒன்றை வெட்டுவதன் சாத்தியம் பற்றி பல்வேறு ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன.

"தமிழ் நாட்டில் தொழில்களின் மின்சாரம் சம்பந்தப்பட்ட எல்லாத் தேவைகளையும் அரசு பூர்த்தி செய்யும். தொழில் துறையிலோ விவசாயத் துறையிலோ, உற்பத்திக்கு மின்சாரப் பற்றுக் குறையால் தடை ஏற்படாது".

"மின்சாரத்தைச் சிக்கனமாய் பயன்படுத்தவும், விரயத்தைத் தடுக்கவும், அவசியமற்ற உபயோகத்தைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்."

**(26-3-76 — அன்று தென்னிந்திய தொழில், வர்த்தகச் சபைக் கூட்டத்தில் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் கூறியது.)**

## கைத்தறிக்குப் புத்துயிர் அளிக்கப்படும் :

"கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு



மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தில் கைத்தறித் துறைக்காக நல்ல பல முன்னேற்றத் திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

''நீண்ட நெடுங்காலமாக, அரசாங்கத்தில் உள்ள அனைத்துத் துறைகளும், தங்கள் தேவைகளுக்குக் கைத்தறி துணிகளையே வாங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. இதனை அரசு ஏற்றுக் கொண்டு பயனுள்ள வகையில் செயல்படுத்தி வருகிறது.

''தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும், தங்கள் ஊழியர்களுக்குச் சீருடை கொடுப்பதற்காகக் கைத்தறித் துணிகளை வாங்க இருக்கின்றன. மற்ற துறைகளும் இதனைப் பின்பற்றும் என்று நம்புகிறேன்.

''கைத்தறித் துணிகளை வாங்குவோருக்கு, விலையில் தள்ளுபடி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தள்ளுபடி தருவது, தற்போதைக்கு நிறுத்தப்படமாட்டாது. ஆனால் இப்படி தள்ளுபடி கொடுப்பதை நீண்ட காலத்திற்கு நீடிக்காமல், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை, உயர்த்துவதற்குரிய வழி வகைகளை ஆராய வேண்டும்.

''நமது கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இன்று இருக்கும் நாகரீகம் அடுத்த சில மாதங்களில் மாறிவிடக் கூடும். இதனைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டுச் சந்தைகளில் அவ்வப்போது மாறும் நாகரீகங்களுக்கு ஏற்ப நமது கைத்தறித்



துணிகள் தயாரிக்கப்பட வேண்டும்.

கைத்தறித் துறையை வலுப்படுத்தி அதற்குப் புத்துயிர் அளிப்பதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த இந்திய அரசு ரூபாய் 300 கோடி செலவிடும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழ் நாட்டில் மேலும் 1,50,000 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்படுவர்.

கரூரில் 1,000 நெசவாளர்களை உள்ளடக்கிய ஏற்றுமதி நோக்கம் கொண்ட கைத்தறித் துணிகள் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் மேற்கொள்ளப்படும் தீவிர கைத்தறி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேலும் 10,000 நெசவாளர்கள் கொண்டு வரப்படுவர். இத் திட்டங்கள் அனைத்துக்கும் அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 6 கோடி செலவிடப்படும்.

*[அனைத்து இந்திய கைத்தறிப் பொருட்காட்சியை 4-4-76 அன்று சென்னையில் ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் துவக்கி வைத்த போது கூறியது].*

## பாடப் புத்தகங்களை ஆராய நால்வர் குழு!



கடந்த ஒன்பதாண்டுகளில், அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடப் புத்தகங்களில் உள்ள ஆட்சேபகரமான பகுதிகளைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்க 20-3-76 அன்று நால்வர் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

அக்குழுவிலுள்ளோர் பற்றிய விவரம் வருமாறு:

திரு. பி. ஆலாலசுந்தரம் செட்டியரர்
(தாம்பரம் கிறித்துவக் கல்லூரி ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசியர்)

திரு. எஸ். பாலகிருஷ்ண ஜோஷி
(இந்து தியாலஜிகள் உயர்நிலைப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர்)

திரு. டி. பி. பாரதி
(பின்தங்கியோர் நலத் துறை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர்)

திரு. சையத் யாகூப்
(பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றவர்)

இந்த நால்வர் குழுவினர் மேற்கொள்ளும் இப்பணிக்காக தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பள்ளிக் கல்வி இயக்குநரகம், அரசுத் தேர்வு இயக்குநரகம் ஆகியவை தேவையான உதவிகளைச் செய்யும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் பாடநூல்களில் உள்ள முரண்பாடான பகுதிகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளிக்குமாறு இக்குழுவினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



# வாழ்வு சிறக்க வளம்பெற சேமியுங்கள்

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை (Fixed Deposits) என்றைக்கும் பாதுகாப்பாய் இருக்கும். காரணம் எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.
எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை உங்களுக்கு நிறைய வட்டியை ஈட்டித் தருகிறது. அதனுல் உங்களின் வருவாய் விரைவில் கூடுகிறது.

| | ஓர் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் | இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் | மூன்று ஆண்டிலிருந்து நாங்கு ஆண்டுகளுக்குள் | நான்கு ஆண்டும் அதற்கு மேலும் |
|---|---|---|---|---|
| வைப்புத்தொகைக்கு அளிக்கப்படும் வட்டிவிகிதம் | 11½% | 12% | 12½% | 13% |

விபரங்களுக்கு தயவு செய்து அணுகவும்:-

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006

சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்.



# தமிழ்நாட்டில் வனத் துறை மேம்பாடு!

**1976-ஆம் ஆண்டு மார்ச் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 'உலக வனவள நாளாக' கொண்டாடப்பட்டதை யொட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.**

வனங்கள், மனித நல்வாழ்வுக்கு இன்றியமையாத இயற்கைச் சொத்தாகும். மரம், விறகு, கோந்து, மெழுகு, அத்தியாவசிய எண்ணெய் மற்றும் பல உபயோகப் பொருட்களை வனங்கள் தருகின்றன. காகிதம், காகிதஅட்டை,செயற்கைப்பட்டு, தீப்பெட்டி, தோல், மரம் அறுக்கும் ஆலைகள் போன்ற ஏராளமான தொழிற்சாலைகள், தங்களின் கச்சாப் பொருட்களுக்குக் காடுகளையே சார்ந்துள்ளன. மண் வளப் பாதுகாப்புக்கும் மழைநீர் சீராக ஓடுவதற்கும் வனங்கள் உதவுகின்றன; அதன் மூலம் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதைக் குறைக்கின்றன. சுற்றுப்புற அசுத்தத்தின் தீமைகளைக் கட்டுப்படுத்தும் முக்கியப் பணியையும் அவை ஆற்றுகின்றன.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் வனவளம் குறைவானதே. தற்போது இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி, பாதுகாக்கப்பட்ட நிலப் பகுதிகளின் மொத்த நிலப்பரப்பு 20,925 சதுர கிலோ மீட்டராகும். மொத்த நிலப் பரப்பில் இது 16.1 சதவிகிதமாகும். ஆனால் தேசிய வனத் துறைக் கொள்கை, வனத்தின் பரப்புக்கு 33 சதவிகித அளவு குறியளவு நிர்ணயித்துள்ளது. இந்த மாநிலத்தின் பெரும்பகுதி 700 மில்லி மீட்டருக்கும் குறைவான ஆண்டு மழையுடன் பாதி வறட்சியான வானிலையைக் கொண்டிருப்பதால் இங்கு இயற்கை வனங்கள் மிகக் குறைவான உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன. எனவே, வனங்களின் உற்பத்தியை மேம்படுத்தி அதன் மூலமான வருவாயை அதிகபட்சம் உயர்த்துவதே வனத்துறை மேம்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**ஐந்தாண்டு திட்டங்களினால் வனத் துறை வளர்ச்சி :**

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வனத்துறைக்கு முழுமையான கவனம் செலுத்த இயலவில்லை என்றாலும், அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் வனத் துறை வளர்ச்சியின் வேகம் உறுதியாக முன்னேறியுள்ளது. நான்காவது திட்ட இறுதி வரையில், பல்வேறு திட்டங்களின்படி மொத்தம் 1,442.74 இலட்சம் ரூபாய் இத்துறைக்குச் செலவிடப்பட்டுள்ளது.

பல்வேறு வன வளத் திட்டங்கள், தேக்கு, தீப்பெட்டி தயாரிப்பதற்கான மரம், முந்திரி, ரப்பர் போன்ற தொழில்துறைப் பொருட்களுக்கான தோட்டங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. காகிதம், செயற்கைப்பட்டு, மரத்தை அடிப்படையாகக் கொண்ட மற்ற தொழிற்சாலைகளின் தேவைகளைச் சமாளிப்பதற்கு யூகலிப்டஸ், தோல் பதனிடுவதற்குத் தேவையான வாட்டில் மரம், மூங்கில் போன்ற விரைவாக வளரும் தோட்டங்களைப் பயிரிடுவதற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வன விரிவாக்கம் பண்ணைக்காடு ஆகிய திட்டங்களின் கீழ், ஏராளமான கிராமப்புற தரிசு நிலங்களும் ஆற்றங்கரைப் பகுதிகளும், ஏரி-கடற்கரைப் பகுதிகளும் வனமயமாக்கப்பட்டுள்ளன.

நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் படுகைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த முறையில் மண் வளப் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதையும், மண் அரிப்பையும் இது குறைக்கிறது.

**மற்ற முக்கியத் திட்டங்கள் பின்வருமாறு :**

**கட்டட வேலைக்கான மரம் (டிம்பர்):** தற்போது தமிழ் நாட்டின் ஆண்டுத் தேவை சுமார் 3 இலட்சம் டன் மரமாகும். ஆனால் 70 ஆயிரம் டன்தான் ஓராண்டில் உற்பத்தியாகிறது. இம்மாநிலத்தின் மரத்தேவையில் பெரும் பகுதி, மற்ற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது. ஐந்தாண்டு திட்டங்களில் கட்டட வேலைக்கான மரங்களை, குறிப்பாகத் தேக்கு மரத்தை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு அனுகூலமான மழையும் மண்வளமும் கோயமுத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ளன.

**விறகு:** தமிழ் நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தேவையான விறகு (மரக்கரி உட்பட) 90 இலட்சம் டன் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு ஆண்டுக்கு 30 லட்சம் டன் விறகே உற்பத்தியாகிறது. மீதித் தேவைப்படும் விறகு, அண்டை மாநிலங்களான கேரளாவிலிருந்தும் ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் வாங்கப்படுகிறது.

வனத்துறை, விறகுத் தேவையைச் சமாளிப்பதற்காகக் கடற்கரைப் பகுதிகளிலும் ஆற்றங்கரைகளிலும் சவுக்கு மரங்களைப் பயிரிடுகிறது. யூகலிப்டஸ் உள்ளூர் பல ரக மரங்கள் ஆகியவையும் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன.

**காகிதக்கூழ் மரத் தோட்டங்கள் ;** காகிதம், செயற்கைப் பட்டுத்தொழிற்சாலைகள், முக்கிய மரக்கூழ் தொழிற்சாலைகளாகும். அத்தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 2 இலட்சம் டன் மரக்கூழ் தேவைப்படுகிறது. அவற்றில் பெரும்பகுதியை வனத்துறை விநியோகிக்கிறது. இதற்கு, மூங்கில், யூகலிப்ட்ஸ், வாட்டில் ஆகிய மரங்கள் முக்கியமாக உபயோகப்படுகின்றன.

**வாட்டில் (தோல்பதனிடுவதற்குத் தேவையான மரம்) :** தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்களில் தோல் பதனிடுதலும் ஒன்ருகும். வாட்டில் மரத்தூள், வாட்டில் மரப்பட்டை ஆகியவை இதற்குப் பயன்படுகின்றன.

நீலகிரி, கொடைக்கானல் மலைப்பகுதிகளில் கரிய வாட்டில் மரங்கள் மொத்தம் சுமார் 24,400 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. பெருமளவு இறக்குமதியை நம்பியிராமலேயே தோல் தொழிற்சாலைகளின் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டு, வாட்டில் மரப் பட்டைகளின் உற்பத்தி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

செயற்கைப் பட்டு நூலிழைத் தொழிற்சாலைக்கும் வாட்டில் மரம் உபயோகப்படுகிறது.

முந்திரி: உலகத்தின் 90 சதவிகித முந்திரிப் பருப்புத் தேவையை இந்தியாவே விநியோகித்தாலும் அது கச்சாப் பொருட்களின் இறக்குமதியைப் பெருமளவு நம்பியுள்ளது. 1973-74-ல் 67 கோடி ரூபாய் மதிப்புக்கு முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த போதும், 38 கோடி ரூபாய் மதிப்புக்கு சுமார் 2 இலட்சம் டன் கச்சா முந்திரிக்



கொட்டைகளை இந்தியா இறக்குமதி செய்தது. ஆகையால், முந்திரிக் கொட்டைகளின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியத் தேவையாகும்.

தமிழ்நாடு வனத்துறை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வனப் பகுதிகளில் பெருமளவு முந்திரி சாகுபடியை மேற்கொண்டது. அது முதல் முந்திரித் தோட்டங்களின் நிலப் பரப்பு பெருகி, 1974-75-ல் மொத்தம் 36,200 எக்டேர் நிலப் பரப்பில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டது. முக்கியமாக செங்கல்பட்டு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமனுதபுரம் மாவட்டங்களில் முந்திரித் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

**ரப்பர், தேயிலை :** அண்மைக் காலங்களில், ரப்பர் , தேயிலை போன்ற தோட்டப் பயிர்களின் சாகுபடியையும் வனத்துறை மேற்கொண்டுள்ளது. ரப்பர் மரம் வளர்ப்பதற்குப் போதுமான சூழ்நிலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. வனத்துறை, 1960-61-ல் இந்த மாவட்டத்தில் ரப்பர் பயிரிடத் துவங்கியது; இதுவரையில் சுமார் 3,500 எக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் தோட்டம் பயிரிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவிலிருந்து குடியேறியவர்களின் புனர்வாழ்விற்காக, 81.49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 800 எக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் பயிரிடும் திட்டம் ஒன்றை வனத்துறை துவக்கியுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 330, இலங்கை அகதிச் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

நீலகிரியில் தேயிலைத் தோட்ட திட்டம், வனத்துறை நிறைவேற்றியுள்ள மற்ருெரு திட்டமாகும். சுமார் 6 கோடி ரூபாய் செலவில் 1,500 எக்டேர் நிலப் பரப்பில் தேயிலைத் தோட்டச் சாகுபடிக்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தினுல், ஸ்ரீலங்காவிலிருந்து குடியேறிய 1,750 அகதிக் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு கிடைக்கும். இதுவரையில் 742 எக்டேர் நிலத்தில் தேயிலைத் தோட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது; 444 குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டது.

**வனத்துறை, பண்ணை வன விரிவாக்ககம்:** இந்த மாநிலத்தில் வனப் பகுதிகளின் குறைவான நிலப்பரப்பைக் கருதி, வன எல்லைக்கு வெளியே உள்ள புறம்-போக்கு நிலங்கள், ஏரிப் படு



கைகள், கால்வாய் மற்றும் ஆற்றங்கரை ஆகிய ஏராளமான பகுதிகளை வனமயமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1956-லிருந்து 1966 வரையில் வனத்துறை நடத்திய ஆய்வின்படி, சுமார் 5.98 இலட்சம் எக்டேர் நிலம், வனமயமாக்கக் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பண்ணை வனத்துறைத் திட்டம் 1960-61-ல் துவக்கப்பட்டது. 1974-75 வரையில் 47,300 எக்டேர் நிலத்தில் இது செயல்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர ஆறு மற்றும் கால்வாய்க் கரைகளில் சுமார் 9,500 எக்டேர் நிலத்திலும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மக்களின் மரம், விறகு, பசுந்தழை உரம் ஆகிய தேவைகளைச் சமாளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வன வளத் திட்ட விரிவாக்க வேகத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் சில மாவட்டங்களில் தனிப்பட்ட பிரிவுகள் துவக்கப் பட்டுள்ளன. தனியார் நிலங்களில் மர வளர்ப்பையும் இந்தப் பிரிவுகள் ஊக்கப்படுத்துகின்றன. இளம் செடிகளை மலிவான விலைக்குத் தருவதோடு, தேவையான தொழில்நுட்ப உதவியையும் அவை அளிக்கின்றன.

நீர்ப்பாசன மற்றும் நீர்மின் திட்டங்களின் படுகைப்பகுதிகளில், மண் அரிப்பைக் குறைத்து நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதைக் குறைக்கும் கருத்துடன் மண் வளப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்துவதன் மூலம் வன விலங்குப் பாதுகாப்பும், சுற்றுப்புற சூழ்நிலையின் சரியான நிர்வாகப் பராமரிப்பும் மற்றொரு முக்கிய அபிவிருத்தி நடவடிக்கையாகும். இந்த மாநிலத்தில் அனேக வன விலங்கு பாதுகாப்பிடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

ஒவ்வொரு திட்ட காலத்தின் போதும் வனத்துறை வளர்ச்சியின் வேகம் அதிகரித்து வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வனத்துறைக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



# தமிழ்நாட்டில் தொலைபேசித் தொடர்பு வசதிகள்



தமிழ் நாட்டின் எல்லா வட்ட தலைநகரங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, மாவட்டத் தலைநகரங்கள், துணை மாவட்டத் தலைமை இடங்கள், துணை வட்டத்தலைமை இடங்கள், 20 ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடங்கள் ஆகியவை அனைத்திலும் இந்த வசதி பின்கண்டவாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

| | தொலைபேசி வசதி | |
|---|---|---|
| | மொத்தம் | அளிக்கப் பட்டவை |
| மாவட்டத் தலைநகர்கள் | 16 | 16 |
| துணை மாவட்டத் தலைமை இடங்கள் | 51 | 51 |
| வட்டத் தலைநகரங்கள் | 122 | 122 |
| துணை வட்டத் தலைமையிடங்கள் | 9 | 9 |
| 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடங்கள் | 32 | 32 |

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 121 இடங்களுக்குத்தொலைபேசி வசதியை அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் 115 இடங்களுக்கு ஏற்கனவே தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 374 வட்டாரத் (பிளாக்) தலைமை இடங்களில் 305 இடங்களுக்குத் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையும், தொலைபேசி தொடர்பகத்திற்கு 12.5 கிலோமீட்டர் தூரத்துக்கு உட்பட்டும் உள்ள மொத்தம் 378 இடங்களில் 169 இடங்களுக்குத்தொலைபேசி வசதி இப்பொழுது உள்ளது.

ஸ்ரீரங்கம் தொலைபேசி டிரங்க் தொடர்பகம், ஆரணி, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் தற்போது உள்ள தொடர்பக விரிவாக்கம், துறையூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள தொடர்பக விரிவாக்கம் ஆகியவை விரைவில் அளிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ள தொலைத் தொடர்பு வசதிகளாகும்.

கூடிய விரைவில் கோயமுத்தூரில் 2,000 வழித் திறன் கொண்ட டிரங்க் தானியங்கித் தொடர்பகம் அமைப்பு ஒன்று செயல்படத் துவங்கும். திருப்பூர், ஈரோடு, சேலம் போன்ற அருகாமையிலுள்ள ஊர்களின் சந்தாதாரர்களுக்கான நேரடி டிரங்க் தொலைபேசித் தொடர்பு (எஸ். டி. டி.) வசதியை அது அளிக்கும். தெற்கு மண்டல 'டிரங்க்' தொலைத் தொடர்புகளை அது விரைவில் கையாளும் செய்யும்.

# வெற்றியை நோக்கி....!




எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

தமிழரசு

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் புதிய முறைகள்



## (1) முல்லை, மல்லிகை மகசூல் பெருக்கும் முறைகள்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் தோட்டவியல் பிரிவில் முல்லை மகசூல், தரம், நறுமண எண்ணெய் ஆகியவற்றை அதிகரிக்க நவீன சாகுபடி நுணுக்கங்களைக் கண்டறிதல் பற்றி நடத்திய ஆராய்ச்சியில், கீழ்க் கண்டவைகள் கண்டறியப்பட்டன.

மூன்று ஆண்டு நடத்தப் பெற்ற ஆராய்ச்சியின் முடிவுகளிலிருந்து முல்லைச் செடிகளை ஜனவரி இறுதி வாரத்திலும், அடுத்து பிப்ரவரி முதல் வாரத்திலும் கவாத்துச் செய்வது மிகச் சிறந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜனவரி இறுதி வாரத்தில் வெட்டப்பட்ட செடிகள் சராசரி 15.4 கிலோ மகசூலும், பிப்ரவரி முதல் வாரத்தில் வெட்டப்பட்ட செடிகள் 14.9 கிலோ மகசூலும் கொடுத்துள்ளன. மற்றக்காலங்களில் வெட்டப்பட்ட செடிகளின் சராசரி மகசூல் 5.7 கிலோவிலிருந்து 10.5 கிலோ வரைதான் இருந்தது.

1973-74-ஆம் ஆண்டுகளில் டிசம்பர் இறுதி வாரத்தில் வெட்டப்பட்ட ஜாதி மல்லிகைச் செடிகள் அதிக மகசூல் கொடுத்துள்ளன.

முல்லைச் செடிகளில் 75. செ.மீ -90 செ.மீ. உயரத்தில் வெட்டப்பட்ட செடிகள் அதைவிடக் குறைந்த உயரத்தில் வெட்டப்பட்ட செடிகளைவிட அதிக மகசூல் கொடுத்துள்ளன.

'எத்ரல்' மருந்து மூலம் இலைகளைக் களைவதால் சிறிதளவு மகசூல் கூடினாலும் கவாத்து முறையே குறிப்பிடத்தக்கதாகும்.

ஆண்டுதோறும் செடிக்கு 6 கிராம் வீதம் தழைச்சத்தினை இலை வழியாக முல்லைச் செடிகளுக்கு இடுவது மிகவும் உயர்ந்த சராசரி மகசூலான 15.6 கிலோ கொடுத்தது. ஆனால் ஜாதி மல்லிகை, குண்டு மல்லிகைகளுக்கு இலைகளில் உரம் தெளிப்பது எந்த விதப் பயனையும் தரவில்லை.

ஜாதி மல்லிகைச் செடிகள் ஆண்டிற்கு இருமுறை உரமிடுவதை விட இரண்டு மாதங்கட்கு ஒரு முறையாக ஆண்டில் 6 முறை தொழு உரம், தழை-மணி-சாம்பல் சத்தினை இடுவதால் அதிக மகசூல் கொடுத்துள்ளன. இவ்

வாறு இடப்பட்ட செடிகளின் சராசரி விளைச்சல் 7.26 கிலோ வாகும். ஆனால் இருமுறை உர மிட்ட செடிகளின் சராசரி மகசூல் 5.96 கிலோ மட்டும்தான்.

இந்த உயர்விளைச்சல் 22 சதவீதம் ஆகிறது. ஒரு ஆண்டில் 6 முறை உரமிடுவதன் மூலம் ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 3,000 மதிப்புப்பெறும் 600 கிலோ மலர்களை அதிகம் பெறலாம். ஆனால் இதன் மூலம் அதிகமாகும் செலவு ரூபாய் 240 மட்டுமே.

## (2) காய்கறி, பயறு வகைகளில் அதிக மகசூல் பெறும் முறைகள்

பறங்கி, புடலை ஆகியவற்றில் காய்ப் பூக்கள் தனியாக உள்ளன. அவற்றில் வெளிவரும் பெண் பூக்களை அதிகப்படுத்தவும், பயறு வகைகளில் பூ உதிர்தலைத் தடுக்கவும் 'எத்ரல்' என்ற இரசாயனம் உதவுகிறது என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்மேற்கொண்ட ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. 'எத்ரல்' தெளித்ததில் பெண் பூக்கள் அதிகரித்து பறங்கியில் 39 சதவீதம் அதிக மகசூலும், புடலையில் 15.38 சதவீதம் அதிக மகசூலும், பயறு வகைகளில் 15.57 சதம் அதிக மகசூலும் கொடுத்தது.



சாதாரணமாகப் பறங்கியும், புடலையும் அதிகமாக ஆண் பூக்கள்தான் விடும். பெண் பூக்கள் தோன்றுவதை அதிகரிப்பதன் மூலம் மகசூலைப் பெருக்க முடியும். பெண் பூக்களை அதிகரிக்க, 'எத்ரல்' மருந்து முதல் இலை விட்டவுடன் பூ மொட்டு விடும் வரை தெளிக்கப்பட்டது. 'எத்ரல்' மருந்து 100 பி.பி.எம். (100 p. p. m.) என்ற அளவில் தெளித்ததில் பறங்கியில் 39 சதவிகிதம் அதிக மகசூல் கண்டது. புடலையில் 'எத்ரல்' மருந்து 50 பி.பி.எம். என்ற அளவில் தெளித்ததில் பெண் பூக்கள் அதிகரித்து 15-38 சதம் அதிக மகசூல் கண்டது.

துவரைக்கு 100 பி.பி.எம். என்ற அளவிலும், உளுந்து பயிருக்கு 250 பி.பி.எம். என்ற அளவிலும் தெளித்ததில் பூ உதிர்தல் வெகுவாகக் கட்டுப் படுத்தப்பட்டு மகசூல் அதிகரித்தது. துவரை எக்டேருக்கு 1,902 கிலோவும், பச்சைப் பயறு 795 கிலோவும், உளுந்து 813 கிலோவும் முதல் பருவத்தில் மகசூல் கொடுத்தன. இவை மருந்து தெளிக்காத பயிரைவிட முறையே 17 சதம், 19 சதம், 57 சதம் அதிகம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. கோடைப்பருவத்தில் விதைக்கப்பட்ட துவரை, 'எத்ரல்' தெளித்ததில் எக்டேருக்கு 2,303 கிலோ கொடுத்தது. இது மருந்து தெளிக்காத பயிரை விட 32 சதம் அதிகம். பச்சைப் பயறு எக்டேருக்கு 1,033 கிலோ கொடுத்தது. உளுந்து பயிரிலும் இதே போன்று 25 சதவீதம் அதிக மகசூல் கண்டது. எக்டேருக்கு 1,190 கிலோ கிடைத்தது.

ஆதலால் பூசணி புடலை, பயறு வகைகளைப் பயிர் செய்யும் விவசாயிகள் பெண் பூக்களை அதிகரிக்கவும், பூ உதிர்தலைத் தடுக்கவும், 'எத்ரல்' மருந்தை தெளித்து இலாபத்தை அதிகரித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## (3) நெல் விளைவிற்குத் துணைபுரியும் 'அசடோபாக்டர்' நுண்ணுயிர்

'அசடோபாக்டர்' எனும் நுண்ணுயிர்களை மண்ணில் இடுவதால் காற்றிலுள்ள தழைச்சத்தை (நைட்ரஜன்) அவைகள் நிலத்தில் நிலைப்படுத்துகின்றன.

இந்த நிலைப்படுத்தப்பட்ட தழைச்சத்து, நெற்பயிருக்குப் பயனளித்து விளைவுக்குத் துணை புரிகின்றன. இரசாயன உரங்களில் தழைச்சத்துத் தரும் உரங்களைப் போன்று தூர்க்கட்டுவதும், வளர்வதும் இந்த முறையில் கிடைக்கும் தழைச்சத்தினாலும் கிடைக்கிறது.

'அசடோபாக்டர்' போடுவதால், பயிருக்கு இரசாயன உரங்களால் கிடைக்கும் மொத்தத் தழைச்சத்தில் கால்பங்கு கிடைக்கிறது. இந்நுண்ணுயிருக்குச் செலவழிக்கும் தொகை ஏக்க



ருக்கு ரூபாய் 20 ஆகும். இதனால் 120 ரூபாய்க்குள்ள இரசாயன உரம் மிச்சமாகிறது என்பது கண்டறியப்படுகிறது. இந்த நுண்ணுயிரால் இரசாயன உரங்களின் செலவில் ஒரு கணிசமான பகுதி மிச்சப்படுகின்றது. ஆனால் இரசாயன உரங்களை அறவே விலக்கிவிட்டு, இந்த 'அசடோபாக்டர்' மட்டிலும் போடுவது நல்லது என்று கருதிவிடக்கூடாது.

பவானி நெல் ரகத்தில் 'அசடோபாக்டர்' உபயோகிப்பதால் எந்த அளவிற்கு இரசாயன தழைச்சத்து உர அளவைக் குறைக்க முடியும் என்பதை அறிய, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் நன்செய் நிலத்தில் பல பரிசோதனைகளை மேற்கொண்டது.

'அசடோபாக்டர்' பின்கண்டவாறு மூன்றுவிதமாக உபயோகப் படுத்தப்பட்டது.

(1) மண்ணில் இடுதல்.
(2) நாற்றுகளின் வேர்களை நனைத்து நடுதல்.
(3) இலைகளின் மேல் தெளித்தல்.

இவ்வாறு 'அசடோபாக்டர்' இடுவதால் 50 சதவீத தழைச்சத்து அளவிலேயே பயிர்களின் உயரமும், தூர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்பட்டன. சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து (50 கிலோ/ஏக்கர்) அளவில் அதிக மகசூல் காணப்பட்டது. இருந்த போதிலும் 50 சதவீதந்தழைச்சத்தும், அசடோபாக்டரும் சேர்ந்து நாற்றுகளை நனைத்து நடுதல், மண்ணில் இடுதல் ஆகிய முறைகளின் மூலம் ஏறத்தாழ சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து அளிக்கும் அளவிற்கு மகசூல் தந்தன. அசடோபாக்டரை 50 சதவீதம் தழைச்சத்து அளவில் விதைகளுடன் கலந்தும், நாற்றுகளின் வேர்களை நனைத்து நட்டும், மண்ணில் இட்டாலும் தானிய மகசூலும், வைக்கோல் மகசூலும் முழு அளவுத் தழைச்சத்து உப

யோகித்த பொழுது கிடைத்த மகசூலுக்குச் சமமாக இருந்தது. சிபாரிசு செய்யப்படும் முழு அளவு தழைச்சத்து அளவுடன் அசடோபாக்டரை மேற் குறிப்பிட்டுள்ள மூன்று விதமாகவும் உபயோகித்ததில் தானிய மகசூல் 13.3 சதம் அதிகமாகவும், வைக்கோல் 13.9 சதவீதம் அதிகமாகவும் கிடைத்தன. எனவே, 'அசடோபாக்டர்' நுண்ணுயிர்கள் நெல் விளைவிற்குத் துணை புரிகின்றன.

## (4) உவரைத் தாங்கும் பயிர்கள்

சில நிலங்கள் உவர் நிலங்களாக இருக்கும் அல்லது சில பாசனக் கிணறுகள் உவர் நீரைக் கொண்டதாக இருக்கும். இவைகளில் உவர் நீரைத் தாங்கும் பயிர்களைச் சாகுபடி செய்தால் தான், விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கும். ஆதலால் உவரைத் தாங்கும் பயிர்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மக்காச் சோளம், ராகி, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற பயிர்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு ரகங்கள் எடுத்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டன. மேற் கூறிய பயிர்களில் சாமைப் பயிர் உவரை தாங்கக் கூடியதாய் இல்லாமல் எக்டேருக்கு 374 கிலோதான் கொடுத்தது.

மக்காச்சோளத்தில் 'தக்காண மக்காச்சோளம்' எக்டேருக்கு 4,596 கிலோ மகசூல் கொடுத்தது. 'கோ. 10 ராகி' எக்டேருக்கு 3,214 கிலோ மகசூல் கொடுத்தது. 'பிசி. 49 குதிரைவாலி' எக்டேருக்கு 1,489 கிலோவும், 'சி. 196 பனி வரகு' எக்டேருக்கு 1,207 கிலோவும் மகசூலும் கொடுத்தன. 'கோ. 4 தினை' எக்டேருக்கு 749 கிலோ மகசூல் கொடுத்தது. இந்த ரகங்கள் உவர் நீரைத் தாங்கி மேற்கூறிய மகசூலைக் கொடுத்தது.



சமைப்புத் திறன், சுவைபற்றி ஆராய்ச்சி செய்ததில் நல்லநீரில் சாகுபடி செய்தத் தானியங்களுக்கும், உவர் நீரில் சாகுபடி செய்த தானியங்களுக்கும் வித்தியாசமே இல்லை. ஆனால் நல்ல நீரில் அறுவடை செய்த பயிரில் செய்த உணவுப் பதார்த்தங்களை விட, சற்று சீக்கிரம் கெட ஆரம்பித்தது. மற்றபடிக்கு வித்தியாசம் ஏதும் இல்லை.

## (5) மண் பரிசோதனையால் விவசாயிகளுக்கு நன்மையா ?

விவசாயிகளுடைய நிலத்தின் மண்வளத்தைப் பரிசோதித்து போதிய உரச் சிபாரிசு செய்வது கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது. மண் பரிசோதனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் தற்போது இயங்கி வருகின்றன. இவ்வாராய்ச்சி நிலையங்கள் அவைகளின் எல்லையிலுள்ள விவசாயிகளின் மண்ணைப் பரிசோதித்து எந்த உரத்தை, எந்த அளவில், எவ்வாறு இட வேண்டும் என்று சிபாரிசு செய்கின்றன. அவ்வாறு கூறப்படும் உரச் சிபாரிசுகளை விவசாயிகள் கையாளுகிறார்களா என அறிய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இவ்வாராய்ச்சியின் மூலம், மண் வளப் பரிசோதனை விவசாயிகளுக்கு மகசூலை அதிகரித்து இலாபத்தைக் கொடுக்கும் வழிமுறையாக அமைந்துள்ளது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி, கோவை மாவட்ட விவசாயிகளிடையே நடத்தப்பட்டது. மண்ணைப் பரிசோதனைக்கு அனுப்பி, சிபாரிசுகளைப் பெற்ற விவசாயிகளில், 34 சதவீதத்தினர் மட்டுமே சிபாரிசு செய்த முறைகளைக் கையாண்டுள்ளார்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மண் பரிசோதனை முடிவுகளைக் கையாளுவதற்கான காரணங்கள் முறையே,

(1) களர் நிலத்தை சீர்திருத்த,

(2) அதிக லாபம் பெற,

(3) விஞ்ஞான செய்முறைகளைக் கையாள,

(4) மகசூல் குறைவாய் உள்ளதால் எனக் கூறியுள்ளார்கள்.

மண்பரிசோதனை நிலையங்களின் சிபாரிசுகளைக் கையாண்ட விவசாயிகளின் அனுபவங்கள், கீழ் வருமாறு:



1. நெல்லில் 5 சதம் முதல் 200 சதம் அதிக மகசூல் கண்டது. சாதாரண மகசூலைவிட 14 சதம் அதிக மகசூல் சராசரியாகக் கண்டது.

2. பருத்தியில் 7 சதம் முதல் 33 சதம் வரை அதிக மகசூல். இது சாதாரண மகசூலைவிட 14.5 சதம் சராசரியாக அதிகம்.

3. கம்புப் பயிரில் 20-30 சதம் வரை அதிக மகசூல்.

4. ராகியில் 13 சதம் முதல் 25 சதம் வரை அதிக மகசூல்.

இதை நாங்கள் கூறுவதாக எண்ண வேண்டாம். இவை விவசாயிகளின் ஒருமித்த கருத்துக்களேயாகும். ஆகையால் விவசாயிகளே, சாகுபடி செய்யப் போகும் பயிர்களுக்குத் தேவையான உரச் சிபாரிசுகளை கையாண்டு அதிக மகசூல் பெற தங்கள் நிலத்தைப் பரிசோதித்து ஆராய்ச்சியாளர் கூறும் சிபாரிசுகளைக் கையாளுங்கள். களர் காரணமாய் மகசூல் குறைவதாயிருந்தாலும், மண்ணைப் பரிசோதித்துக் களர் நிலத்தைச் சீர்திருத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனைக்குக் கட்டணம் இருப்பதாக நினைக்காதீர்கள்! இது இலவசமாக செய்யப்படும். மண் பரிசோதனை நிலையத்தை அணுகுங்கள்.

எனவே, மண்ணிற்குத் தேவையான உணவு கொடுத்துப் பயிர்களின் மகசூலைப் பெருக்கி, உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்:** தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 3.

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரு. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது— இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரு. | ரு. | ரு. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



# இன்றைய உலகிற்கு வள்ளுவம்


பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.


தமிழ்ப் பண்பாட்டுப் பூங்காவில் பூத்த நறுமலர் திருக்குறள். அதில் தமிழருடைய அறிவு மணமும், அன்பு வண்ணமும் குழைந்தும் இழைந்தும் ஒளிர்வதைக் காணலாம். பண்டை உலகில் மனிதனை மனிதனுக வாழுமாறு அறிவுறுத்திய அறநூல் திருக்குறள்! இன்றைய உலகில் வளமாக வாழ்வதோடு நலமாக வாழவும், சீராக வாழ்வதோடு சிறப்பாக வாழவும் வழிகாட்டும் வாழ்வியல் நூல் திருக்குறள்! மனிதனைப் பாடும் நூல் அது! மனிதனை மாண்புடன் வாழுமாறு தூண்டும் நூல் அது! சுருங்கச் சொல்லுவதானுல் அனைத்துலக மனிதனை உருவாக்க உதவும் நூல் அது! இதனுல்தான், இத்திரு நூலினை இயற்றிய திருவள்ளுவரை '**மன்பதைப் பாவலன்**' என்று அறிஞர்போற்றுகின்றனர்.

திருவள்ளுவர், மனித இயல்புகளையும், நடத்தைகளையும் கூர்ந்து ஆராய்ந்த சான்ருேராவார். அவர் வாழ்க்கையை நிலையாகவும் முழுமையாகவும் கண்டுணர்ந்தவர். அவருடைய நோக்கு, எதனையும் ஊடுருவிப் பாயும் செம்பொருள் கண்ட மெய்யுணர்வாளரின் நோக்காகும். அவருடைய ஒளிபடைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும் கற்பவர் உள்ளத்தைச் சுண்டி இழுக்கும் பேராற்றல் வாய்ந்தன.

**கனவுலகக் கற்பனையாளரா?**

அவர் ஒரு கனவுலகக் கற்பனையாளர் அல்லர்; செயல்முறைச் சிந்தனையாளர் ஆவார். இந்த உலகில் நல்லொழுக்கத்தோடு வாழ்வதற்குத் தேவையான சூழலினையும், வாழ்க்கை நிலையினையும் அவர் உணர்ந்து போற்றுகின்ருர். மனித மனத்தின் இயல்புகளையும், செயற்பாட்டையும் அவர் நன்கு ஆராய்ந்துள்ளார். அதன் விளைவாக அறவாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை தூய்மையான மனம் என்னும் முடிவிற்கு வந்துள்ளார். அதனை,

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.** **(திருக். 34)**

எனும் குறட்பாவின் மூலம் இனிது விளக்கியுள்ளார். இக்குறட்பாவில் ஒழுக்க நெறிக்கு உளவியல் சார்பான வழியை அவர் வகுத்துத் தந்துள்ளார். இவ்வழி, மக்களுக்கு வாழ்க்கையின் பல்வேறு சூழல்களிலும் நிலைகளிலும் பேருதவியாக இருக்கும் என்பது உறுதி.

மனிதன் ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமானுல், அவன் பசியால் வாடும் அவல நிலை இருக்கக் கூடாது. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' அல்லவா? இதனுல் தான் தம் நூலில் இரண்டாவது அதிகாரமாக 'வான் சிறப்பினை'த் திருவள்ளுவர் அமைத்துள்ளார். மழையின் றேல் உணவுப் பொருள்கள் விளைவது ஏது? உணவின்றி உயிர்கள் வாழ இயலுமோ? 'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி(உணவு) கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' அன்ருே? உலகியலில் ஈடுபட்டோருக்கும், துறவிகளுக்கும் முதல் தேவையாக உள்ளது உணவுப் பொருள்களாகும். உணவுப் பொருள்களை மழையின் உதவியால் மண்ணுலகம் பெறுகிறது. மழை பெய்யவில்லையானுல், பசும்புல்லும் தோன்ருது; இந்தப் பெரிய உலகத்தில் தானமும், தவமும் நடைபெருு; எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல், உலக வாழ்க்கை நடைபெருது. அதைப் போன்றே மழை இல்லையானுல், ஒழுக்கமும் நிலைபெருமல் போகும். எனவே, மக்களின் நல்வாழ்விற்கும், ஒழுக்கத்திற்கும் இன்றியமையாத அடிப்படைப் பொருளாதாரத் தேவையாக மழையினைத் திருவள்ளுவர் போற்றுகின்ருர்.

அவருடைய நடைமுறை வாழ்விற்குரிய செயல்முறை நோக்கிற்கு, இன்னெரு சான்று காட்டலாம். ஒரு நாகரிகம் அழிந்து ஒழியாமல் நிலைத்து நிற்கத் தேவைப்படுவன உண்மைப் பண்பும், கொல்லாமை சூழும் நெறியுமாகும். ஆனுல், மேற்போக்காக நோக்குகின்ற பொழுது இவ்விரு இயல்புகளும் நடைமுறைக்கு ஒவ்வாத மிக உயர்ந்த இலட்சியங்களாகத் தோன்றும். இவற்றைக் கடைப்பிடிக்கின்ற பொழுது உண்டாகக்கூடிய இன்னல்களையும் இடையூறுகளையும், திருவள்ளுவர் நன்குணர்ந்துள்ளார்.

'வாய்மை எனப்படுவது யாது?' எனும் வினுவினை எழுப்பி, அதற்கு அவரே 'யாதொன்றும் தீமை இலாத சொலல்' (திருக். 291) எனும் விடையினையும் தருகின்ருர்; மற்றும் 'பொய்ம்மையும் வாய்மையிடத்து, புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' (திருக். 292) என்னும் கருத்தையும்

தெரிவிக்கின்றார். 'குற்றமே இல்லாத நன்மையைத் தருமானால் பொய்யான சொற்களையும், வாய்மையானவையாகக் கருதலாம்' எனும் கருத்து வள்ளுவரின் பரந்த உள்ளத்தையும், ஆழ்ந்த மனிதநல நாட்டத்தையும் அறிவிக்கிறது. இதனால், உண்மை பேசுவது என்பது வெறும் அறிவாராய்ச்சிக்குரிய பண்பு அன்று என்பதையும், நடைமுறை உலகின் உயிர்த்துடிப்புமிக்க முடிந்த பயன் என்பதையும் அவர் தெளிவுறுத்துகிறார்.

### இன்றைய உலகிற்குத் தேவை!

வியக்கத்தக்க வகையில் அனைத்துலக நோக்கும், உள்ளத்தைக் கவரத்தக்க வகையில் புத்துலகச் சிந்தனைப் போக்கும் கொண்டதாகத் திருக்குறள் விளங்குகிறது. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் நற்செய்திகள் தகைசால் வீறமைதியும், எளிமைமிகு பெருமிதப் பண்பும் வாய்ந்தனவாகும். பண்டைக் காலத்தை விட, இன்றைய உலகிற்கு அவை மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. நலமிக்க வளமான இன்பம் நிறைந்த வாழ்க்கைக்கு, அவர் ஒரு 'நடுவழியினைக் காட்டுகின்றார். அவ்வழி பண்டைத் தமிழ்ச் சான்றோர் வாழ்ந்து காட்டிய செவ்வழி; நல்வழி, அறவழி. அதுதான் அன்பு வழிப்பட்ட அற நெறியாகும்.

**அன்போடு இயைந்த வழக்கென்ப,**
**ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு**
**(திருக். 73)**

**அன்பின் வழியது உயர்நிலை**
**அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு**
**(திருக். 80)**

என்னும் குறட்பாக்கள் 'அன்பு நெறியே மனித குலத்தை வாழ்விக்கும்' எனும் கருத்தினை உலகிற்கு உணர்த்துகின்றன.

தனக்குத் துன்பமானவை என்று உணர்ந்தவற்றைப் பிறருக்குச் செய்யலாகாது' (திருக். 316) எனும் கருத்தினை வள்ளுவர் அறிவுறுத்துந் திறன் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. 'தன்னுயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், மற்ற உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்தல் என்ன காரணத்தால்?' (திருக். 318) எனும் வினாவினை எழுப்பி, அதற்கு நம்மையே விடை காணுமாறு விட்டுவிடுகின்றார்.



'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' (திருக். 322) நெறியே உலகம் போற்றத்தக்க சிறந்த நெறி என்பது அவருடைய கருத்து. பிறருக்குப் பயன்பட வாழும் வாழ்க்கையே பல்லாற்றானும் சிறந்த வாழ்க்கை என்பதை 'ஒப்புரவறிதல்' எனும் அதிகாரத்தில் அவர் தெளிவுறுத்தியுள்ளார். இக்கருத்துகள், இன்றைய உலகின் சிறப்புமிக்க சிந்தனையாளர்களின் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொண்டுள்ளன. இவை யாவும் வாழ்க்கையைப் பற்றிய சமுதாய சிந்தனையையும், அன்பின் வழிப்பட்ட செயல்களையும், பிறர் துன்பத்திற்கு இரங்கி ஏங்குவதோடு அமையாது செயல்வழிப்பட்ட தொண்டு நெறியையும் வலியுறுத்துகின்றன. இவ்வகையில் இன்றைய மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் மனநலத்தோடு, உடல் நலமும் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ இயலும் என்பது வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறியாகும்.

**புத்துலகச் சிற்பி**

**புதியதோர் உலகு செய்வோம்-கெட்ட**
**போரிடும் உலகினை வேரோடு**
**சாய்ப்போம்!**

என்பது பாவேந்தர் பாரதிதாசனின் முழக்கமாகும். இதே முழக்கத்தைத் திருக்குறளில் மெல்லிய குரலில் நாம் கேட்கின்றோம். திருவள்ளுவர் புதியதோர் உலகைப் படைக்க இயலும் என்னும் நம்பிக்கையோடு-மகிழ்வு நலக்கோட்பாட்டோடு தம் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். 'மனித இனம் வீழ்ச்சியுற்றுவிட்டது' என்றோ, 'உலகம் விரைவில் அழிந்துவிடும்' என்றோ அவர் நினைக்கவில்லை. அவருடைய மெய்யுணர்வுக் கோட்பாடு 'உலக மறுப்பின்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்திய மண்ணில் இத்தகைய கொள்கை திருவள்ளுவரால் உருவாக்கப்பட்டுள்ளதைக் கண்டு, டாக்டர் ஆல்பர்ட்



சுவைட்சர் வியப்பும் விம்மிதமும் அடைந்துள்ளார். அறநெறியில் நிலையாக நின்று ஒழுகுவதன் மூலம், மனிதன் மண்ணகத்தில் 'இறைவனுடைய பெரின்ப விண்ணகத்தைக் ' கொண்டுவர இயலும் என்னும் நம்பிக்கையுடன் திருவள்ளுவர் அறத்தின் ஆற்றல்மிகு மாட்சியை அறிவுறுத்துகிறார். இம் மெய்யுணர்வு மிகு கவிஞர் உலகிற்கு வழங்கும் நற்செய்தியின் சாரம் 'என்றுமே நம்பிக்கை மிக்க நல்வாழ்வு யாவருக்கும் காத்துக் கிடக்கிறது' என்பதேயாகும்.

திருவள்ளுவரின் முப்பாலில் குடும்பவாழ்க்கையின் பீடும், பெருமையும் ஒருவகைப் புதிய வடிவையும், வனப்பையும் பெற்றுள்ளதைக் காணுகின்றோம். இல்வாழ்க்கை நிலையினை அவர் மிகச் சிறந்த வாழ்க்கைப் பேருகக் கருதுகிறார்; 'அறன் எனப் பட்டதே இல்லவாழ்க்கை' எனப் போற்றுகிறார்.

**அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**
**(திருக். 45)**

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை**
**யாற்றின் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவது எவன்?**
**(திருக். 46)**

என்னும் குறட்பாக்கள் 'இல்லறமே நல்லறம்' என்பதை எடுத்துரைக்கின்றன. அனைத்துலகச் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கு இல்லறமே, சிறந்த பயிற்சிப் பள்ளியாக வள்ளுவரால் போற்றப்படுகிறது. எனவே, எண்ணற்ற மாக்களில் 'எத்துணையும் பேதமுறுது எவ்வுயிலும் வுயிரும் தம்முயிர்போல் வாழும், அன்பு நெறியை, அருள் நெறியை, அருளறவாழ்வை அவர் வற்புறுத்துகிறார். அன்பும் மன்னிக்கும் பண்புமே மனித இனத்தின் பிணிதீர்க்கும் மருந்தாகும் என்பதைப் பல இடங்களில் அவர் தெளிவுறுத்தியுள்ளார்.

**பொறுத்தல் இறப்பினை என்றும்**
**அதனை**
**மறத்தல் அதனினும் நன்று**
**(திருக். 152)**

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்;**
**பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்.**
**(திருக். 156)**

**இன்னுசெய் தாரை ஒறுத்தல்**
**அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**
**(திருக். 314)**

**இன்னுசெய் தார்க்கும் இனியவே**
**செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு**
**(திருக். 987)**

இக்குறட்பாக்களில் பிறர் செய்த தீமைகளைப் பொறுத்துக் கொள்வதோடு மன்னித்து, மறந்துவிடுமாறு அறிவுறுத்துகிறார் வள்ளுவர். அத்துடன் மன அமைதியோடு உள்ளச் சமநிலையை இழக்காமல் வாழவும் அவர் வழிகாட்டுகின்றார். இங்கு மிக அடக்கமானமுறையில் அகிம்சைக் கொள்கையை அவர் போதிக்கின்றார். இன்னு செய்தாருக்கு இனியவை செய்வதன் மூலம் சமுதாயத்தில், பகைமையையும், பூசலையும் களைந்து இன்ப அன்பு வாழ்க்கையை அமைக்குமாறு அவர் மனித இனத்தைத் தூண்டுகிறார்.

தனிமனிதனைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் வள்ளுவர் கொண்டுள்ள கருத்துகள் ... வ்வொரு கவர்ச்சிமிக்கன. ... மனிதனும் நேர்மையாகவும் பெருமிதத்துடனும் வாழ்வதற்கேற்ற தொழில்களைச் செய்வதற்குரிய வாய்ப்புகளை அளிக்கும் சமுதாயத்தை உருவாக்க அவர் வழி வகுத்துக் காட்டுகிறார். குடிமக்கள் தொழில் செய்வதற்கும், நேர்மையாக வாழ்வதற்கும் பேரளவில் வாய்ப்பினை



நல்குவதே நாகரிகமுற்ற சமுதாயத்தின் தலையாய கடமையாக அவர் கருதுகிறார். ஆனால், பிச்சை எடுத்துத்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்னும் அவல நிலை ஒரு மனிதனுக்கு உண்டாகுமானால், அவனைப் படைத்த- அவன் வாழும் உலகைப்படைத்த 'கடவுள் அழிந்தொழிவானுக!' என வள்ளுவர், கடவுளையே சபிக்கின்றார்.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்**
**பரந்து**
**கெடுக உலகியற்றி யான்**
**(திருக். 1062)**

திருவள்ளுவருக்கு உண்டான இந்த அறச் சீற்றம், மனித இனத்தின் நல்வாழ்வில் அவர் கொண்டுள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறது. பிச்சை எடுப்பதை அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். சமுதாயத்தின் சீர்கேட்டால் பிச்சை எடுத்து வாழும் நெருக்கடி நிலைக்கு ஆளானவர்களைக் கண்டு அவர் உள்ளம் நைந்துருகிறார். அவர்களை மிகவும் உருக்கத்தோடு ''பிச்சை கேட்பதானல், உள்ளதை ஒளித்து, 'இல்லை' எனக் கூறுவோரிடம் சென்று அருள் கூர்ந்து பிச்சை எடுக்காதீர்!'' (திருக். 1067) என்று வேண்டுகிறார்.

கடுமையாக உழைத்து, அதன் மூலம் வாழ்வதற்கு வழி தேடுமாறு மனிதரை அவர் நயமாகத் தூண்டுகிறார். இந்நிலையில் 'ஊழ் வினைப்பயனால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்' (திருக். 619) என்றும், 'சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு நேராதவாறு முயல்கின்றவர் தம் செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் ஒரு காலத்தில் தோல்வியுறச் செய்வர்' (திருக். 620) என்றும் அறிவுறுத்துவதன் மூலம் உழைத்து வாழுமாறு அவர் வழிகாட்டுகிறார். இவற்றால் மனித முயற்சியிலேயே வாழ்க்கையின் வெற்றிக்குரிய மறைபொருள் புதைந்து கிடப்பது புலனாகின்றது.

திருவள்ளுவர் முடியாட்சி சிறப்புற்று விளங்கிய காலத்தில் வாழ்ந்தவராவர். அவர் முடியுடை வேந்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ள அறிவுரைகள் இன்றைய குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வருவனவாக உள்ளன. குடிமக்களின் நலனையே கருதி ஆட்சிசெய்யும் மன்னனை, மக்கள் தெய்வமாகப் போற்றுவர் என்பது வள்ளுவரின் வாய்மொழி. இன்றும் அத்தகைய தலைவர்களை மக்கள், 'மனிதருள் மாணிக்கம்' எனப் போற்றுவது கண்கூடு.

நாடாளும் தலைவன் காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் அற்றவனாகவும் வாழ வேண்டும் (திருக். 386) என்னும் கருத்து, எக்காலத்திற்கும் எத்தகைய அரசிற்கும் பொருந்துவது அன்றோ?

கடிந்து அறிவுரை கூறும் பெரியோர்களின் துணை இல்லாத அரசன், தன்னை அழிக்க வல்ல பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெட்டு அழிவான் என்னும் அறிவுரை (திருக். 448) நாடாளும் தலைவர்களுக்குச் செய்யப்படும் எச்சரிக்கையாகும்.

இந்தியாவின் 'கல்வி வரலாற்றில்', நாம் முதன் முதலாகத் திருக்குறளில்தான், சாதி சமய மொழி வேறுபாடற்ற நிலையில் குடிமக்கள் அனைவரும் கல்வி கற்பதற்குத் தேவையான வசதிகளை அரசு செய்துதர வேண்டும் என்னும் புத்துலகக் கொள்கையினைக் காண முடிகிறது. கல்வியை ஜனநாயக முறைப்படுத்தும் செயலுக்காக வள்ளுவர் பரிவுடன் போராடியுள்ளார். 'அடிப்படைக் கல்வி அனைவருக்கும் பொதுவானது. அது அறிவியலையும் கலைகளையும் கற்பிப்ப



தாகும்' என்பதைத் திருவள்ளுவர் தெளிவுறுத்துந் திறன் அனைத்துலகக் கல்வியாளர்களின் கருத்தைக் கவருவதாகும். 'கல்வியறிவு பெற்ற மனிதனே கண்பார்வையுடையவன்; கல்வியறிவு இல்லாதார் கண்கள் இருந்தும் குருடரேயாவர்' (திருக். 392) எனும் வள்ளுவர் கருத்து, கல்வியின் முக்கியத்துவத்தையும் அது அனைவருக்கும்-மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவானது என்பதையும் வலியுறுத்துகிறது.

ஒரு தந்தையின் கடமைகளைச் சுட்டுகின்ற பொழுது வள்ளுவர், ''கற்றவர் அவையில் தன் மகன் முந்தி இருக்கும்படியாக அவனைக் கல்வியில் சிறந்து விளங்கச் செய்ய வேண்டும்' (திருக். 67) எனத் தெரிவித்துள்ளமை எக்காலத்திற்கும் தேவைப்படும் அறிவுரையாகும். கல்வி அறிவுடையோன் நல்ல பண்பாடு உடையவனாக விளங்குவான். அதனால் அவன் வீடும் நாடும் நலம் பெறும் என்பது திருவள்ளுவருடைய உள்ளக்கிடக்கையாகும்.

நாம் விளம்பர யுகத்தில் வாழ்கின்றோம். எதற்கெடுத்தாலும் விளம்பரமும் பிரசாரமும் செய்வதே இக்காலத்தின் கோலமாகும். பாமர மனிதனைத் தனியே சிந்திக்க விடும் வழக்கம் இன்று அடியோடு மறைந்துவிட்டது. இத்தகைய சிறப்பும் புகழும் உடைய பொறுப்புமிகு பெரிய மனிதர் இதைக் கூறுகின்றார். எனவே, நாம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்! சிந்திக்கக் கூடாது!' என்பதே. இன்றைய சுலோகமாகும். ஆனால், திருவள்ளுவர் 'அபாய அறிவிப்பு' செய்கின்றார். 'சிந்தனை செய் மனிதா!' சிந்தனை செய்! எதையும் எண்ணிப்பார்க்காமல் ஏற்றுக் கொள்ளாதே!' என வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு
(திருக். 423)

என்னும் குறள், சாக்ரட்டீசின் உண்மை நாடும் வேட்கை மேற்கு நாடுகளுக்கு மட்டும் உரிய சொத்து அன்று; இந்திய நாட்டிற்குப் பொன்றாப் புகழினைத் தேடித் தரும் பண்பு என்பதை நமக்கு உணர்த்துகிறது.

பாலுணர்வில் எழும் காதல் உணர்வு, சமுதாயக் கட்டுக்கோப்பிற்குரிய அன்பிற்கு அடிப்படையாகும்; இந்த உலகியல் அன்பு, ஆன்மிக அன்பாகிய அருளுணர்விற்கு அடிப்படையாகும் என்பது திருவள்ளுவரின் கொள்கையாகும். இம்மூவகை அன்பும் மனித வாழ்க்கையினை மாட்சியுறச் செய்கின்றன. இம்மூவகை அன்பின் ஆற்றலால் இயங்குவனவே அறம், பொருள், இன்பம் என்னும் மனித வாழ்க்கையின் மூவகைப் பயன்மதிப்புகளாகும். காதல் இன்பமே மனிதன் அனுபவிக்கக் கூடிய இன்பங்களுள் தலையாயதும் சிறந்ததுமாகும் என்பதற்கு வள்ளுவர் காட்டும் காரணம் புதுமையானது; இன்பம் பயப்பதுமாகும். ஒரே சமயத்தில் ஒருமனிதன் கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாலாகிய இன்பங்களைத் தன் காதலியிடமே பெற இயலும் என்பது வள்ளுவரின் துணிவாகும்.

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.
(திருக். 1101)

இம்முதுமொழியை இந்த விண்வெளி யுகத்தில் கூட யாரும் மறுக்க இயலாது எனலாம்.

இத்தகைய சிறப்புமிகு மனித இன நல நாட்டத்திற்குரிய இயல்புகள் திருக்குறளை அணி செய்கின்றன. மற்றும் வற்றாது வளங்கொழிக்கும் வாழ்க்கைத் தத்துவத்தையும், அனைத்துலகத்திற்கும் பயன்படத்தக்க நற்செய்திகளையும் கலையழகும் கற்பனை வளமும் பொருந்திய நடையில் நவில்தொறும் நூல்நயம் பயக்கும் வகையில் திருவள்ளுவர் தம் நூலில் தெளிவுறுத்தியுள்ளார். இவ்விழுமிய நூலினை,

''தமிழிலக்கியத்துள் தலைசிறந்த
இலக்கியப் படைப்பு;
மனித இனத்தின் சிந்தனையில்
முகிழ்த்த சிறப்பும்
தூய்மையும் வாய்ந்த இலக்கியப்
பெட்டகம்''

என்று ஏரியல் ( Ariel ) போற்றுவது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

## தமிழ்மொழியில் எழுந்த முதல் விமரிசன நூல்

நூல்களுக்கு மதிப்புரை எழுதுகின்ற வழக்கம் தினசரிப் பத்திரிகைகளிலும் வார ஏடுகளிலும் இடம்பெறுவதைப் பார்க்கிறோம்; இந்த விமரிசனக்கலை மற்ற நாடுகளில் எப்போது துவக்கம் ஆகியது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் தமிழகத்தில் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றியிருக்கிறது என்பது அறிஞர்களால் உறுதி செய்யப்பெற்ற செய்தியாகும்.

முதல் ''விமரிசனக்கலை'' தோற்றம் ஆவதற்கு வழிவகுத்த பெருமை திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உண்டு! திருக்குறளைப் பயின்ற புலவர்கள், அதன் பெருமையையும், சிறப்பையும் வெண்பாவில் எழுதி மகிழ்ந்திருக்கின்றனர். ஐம்பது புலவர்கள் திருக்குறளுக்கு வழங்கிய பாராட்டு வெண்பாக்கள் 'திருவள்ளுவ மாலை' என்னும் நூலாகத் தொகுக்கப் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல, 'தமிழ்ப்புலவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருப்பார்கள்' என்று பொதுவாகக் கூறப்படும் குற்றச்சாட்டு, இந்தத் திருவள்ளுவ மாலையின் மூலம் அடிபடுகிறது. உலகப் பொதுமறையாம் திருக்குறளைப் படைத்தளித்த வள்ளுவரைப் பாராட்டிய புலவர்களில் பலர் வள்ளுவரின் சம காலத்தவர் என்றும், சில புலவர்கள், வள்ளுவருக்குப் பிற்காலத்தவர் என்றும், 'திருவள்ளுவ மாலை' என்னும் விமரிசன நூல் தொகுக்கப்பெற்றது கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நூலாகத் தொகுக்கப் பெற்றது 9 ஆம் நூற்றாண்டு என்றாலும் விமரிசன வெண்பாக்கள் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டன என்பதும் அறிஞர் தம் ஆராய்ச்சி முடிவு. இவ்வாறு பார்த்தால், கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலேயே விமரிசனக் கலையை உருவாக்கிய பெருமை தமிழ் மொழிக்கு உண்டு!

'திருவள்ளுவ மாலை'யில் இடம் பெற்றுள்ள புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கபிலர், பரணர், நக்கீரர், சீத்தலைச் சாத்தனார், கல்லாடர், மாமூலனார், மாங்குடி மருதன், கீரந்தையார், கவிசாகரப் பெருந்தேவனார், குலபதி நாயனார், ஔவையார், அரிசில் கிழார், வெள்ளி வீதியார், நப்பாலத்தனார் ஆகியோர் ஆவார்கள்.

திருஞான சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி பாடிய பாடல்கள், நம்மாழ்வார் மீது கம்பர் இயற்றியதாகக் கருதப் பெறும் 'சடகோபரந்தாதி', சைவ சமய குரவர் நால்வர் மீது சிவப்பிரகாச சுவாமிகள் செய்த, 'நால்வர் நான்மணி மாலை' போன்ற பிரபந்தங்கள் யாவும் சமய நூல்களாகவே அமைந்திருக்கின்றன. ஆனால், திருவள்ளுவரின் சிறப்பைப் பாராட்டி இயற்றப் பெற்ற திருவள்ளுவ மாலையின் பாடல்கள் திருக்குறளின் சொற்சுவை, பொருட்சுவை முதலிய இலக்கிய நயங்களையே பாராட்டிப் பாடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது திருவள்ளுவ மாலைக்கு உள்ள தனிச்சிறப்பு ஆகும்.

—எஸ். எஸ்.

## 24 மொழிகளில் இலக்கியத் திருக்குறள்

உலகத்தில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெருமை திருக்குறளுக்கு உண்டு. அதனால்தான் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாராட்டிக் கூறியிருக்கிறார். உலகின் பாராட்டுப் பெறும் அளவுக்கு, உலகில் 24 மொழிகளில் குறள் பெயர்க்கப்பட்டுள்ளது. அந்த மொழிகள் எவை என்று பார்ப்போம்.

**இந்திய மொழிகள் :**

வங்காளம்
குசராத்தி
இந்தி
கன்னடம்
மராத்தி
சமஸ்கிருதம்
தெலுங்கு
மலையாளம்
உருது

**ஆசிய மொழிகள் :**

பர்மா
சீனம்
மலாயா
சிங்களம்
பிஜி

**ஐரோப்பிய மொழிகள் :**

ஆங்கிலம்
டச்சு
செக்
ஃபின்னிஸ்
ஃபிரெஞ்சு
ஜெர்மன்
லத்தீன்
போலிஷ்
ரஷியா
ஸ்வீடன்

# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.





டான்சி

தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014




# திருக்குறளுக்கு பிறநாட்டார் வழங்கிய பாராட்டு மொழிகள்

உலகத்தின் தனிப்பெரும் திறமையாளர்களில் திருவள்ளுவரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. மதிப்பிலே திருவள்ளுவரின் திருக்குறள் ஏனைய தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் மிஞ்சி நிற்கிறது. ஒரு நாட்டிலுள்ள எல்லா மக்களின் உணர்ச்சியையும் ஊடுருவி, எந்நாளும் மாயாது நின்று நிலவும் ஆற்றல் மிக்க ஒரு சில பெருநூல்களிலே அதுவும் ஒன்று. குறட்பாக்கள் மிகச் சிறந்த ஒழுக்கத்தைத் திட்டமிட்டுக் கூறும் உரைகளாக விளங்குகின்றன.

—ஜி. யு. போப்.

திருக்குறளுக்குப் பல மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன. எனினும் எந்த மொழி பெயர்ப்பும் திருக்குறளின் கவர்ச்சித் தன்மையை ஒரு சிறிதும் எடுத்துக் காட்ட முடியாது. உண்மையில் அது நன்கு பின்னப்பட்ட 'வெள்ளி வலை'யினுள் எழிலுற வைக்கப்பட்டிருக்கும் 'தங்க ஆப்பிள்' ஆகும்.

—டாக்டர் கிரௌல்.



திருக்குறளை ஆக்கியருளிய திருவள்ளுவரின் பிறப்புப் பற்றி எத்தகைய செய்திகள் புனைந்துரைக்கப் பெற்றாலும், அவர் தமிழ்ப்பெரும் புலவர்களில் தெய்வத் தன்மை வாய்ந்த மன்னராக ஒப்புக் கொள்ளப்பெற்றிருக்கிறார்.

—கால்டுவெல்.

தமிழ் நூல்களில் தலை சிறந்து விளங்குவது திருக்குறளே. உயர்வுடனும் தூய்மையுடனும் உள்ளக் கருத்துக்களை எடுத்து விளக்கிய நூல்களில் அதுவும் ஒன்றாகும். திருக்குறள் ஆசிரியர், வகுப்புக்களையும் மக்கட் பிரிவுகளையும் நம்பிக்கைகளையும் பொருட்படுத்தாமல் மக்கள் குழுக்களுக்கே உரியவகையில் எழுதிச் செல்கிறார்; ஆன்ற நல்லொழுக்கத்தையும் கலப்பற்ற நீதியையுமே வகுத்துச் செல்லுகிறார். எத்தகைய குறைவும் இல்லாத நிறைவாற்றல் படைத்தவராகத் திகழ்கின்றார்.

—ஏரியல்.

கருத்திலும் நடையிலும் ஒப்புயர்வற்று விளங்கும் நூல்களில் தலையாயது திருக்குறள். மக்கள் யாவருக்கும் ஒருங்கே அமைந்துள்ள உண்மைகளை மட்டுமே தமது நூலில் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார். இதனால் மத நூலிலும் ஏனைய சாத்திரங்களிலும் காணப்படும் பல சுவையற்ற பழக்க வழக்கங்கள் இடம்பெறாமல் நீக்கப்பட்டு, நூல் நடை பொதுவில் ஒரு மேம்பாட்டையடைந்து பொலிகிறது.

—ட்ரூ பாதிரியார்.





கர்ணாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பூதான் இயக்கத்தில் சார்பில் 30-3-76-ல் நடைபெற்ற விழாவில் திரு. பி. கே. தவே அவர்கள் பட்டா வழங்கினார்.



சோவியத் ரஷ்யாவின் நீதித்துறை அமைச்சர் திரு. டெரிபிலோவ் அவர்கள் 31-3-76 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களைச் சந்தித்து உரையாடினார்.

# படமும் செய்தியும்



திருச்சியில் உள்ள துணைத் தொழிற் பேட்டையை, திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 30-3-76 அன்று பார்வையிட்டார்.

திரு. பி. கே. தவே அவர்கள் 30-3-76 அன்று, மதுரையில் நடைபெற்ற கருத்துக் காட்சியைப் பார்வையிட்டார்.

ஸ்டேட் பாங்கு துவக்கியுள்ள 'தனக்குத்தானே வேலைவாய்ப்பு அமைத்துக் கொள்ளும் கடன்' திட்டத்தின்கீழ், ஊனமுற்ற ஒருவருக்கு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மானியம் வழங்கினார்.







ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 27—3—76 அன்று, சென்னை 'தாஜ் கொரமாண்டல் ஹோட்டலில்' பால்வள நிறுவனம் மூலமாக ''இலட்சக்கணக்கானோர்க்குப் பால்'' (*Milk for millions*) என்ற கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.



ஐக்கிய அரபு எமைரேட்டைச் சார்ந்த மின்சாரம் மற்றும் நீர்த்துறை அமைச்சர் திரு. சையத் இப்ராகிம் டார்னிஷ் அவர்கள் 2—4—76-ல் சென்னைக்கு வருகை தந்தார்.



அரசுப்பணியில் இருக்கும்போது இறந்துவிட்ட அரசு ஊழியர் ஒருவரின் துணைவியாருக்கு, குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் ரூபாய் 10,000 வழங்கினார்.



ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் 29—3—76 அன்று, மதுரை பால்வள நிறுவனத்தைப் பார்வையிட்டார்.



‘உலக ஊனமுற்றோர் நாள்’ 3-4-76-ல் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில், ஊன முற்றவர்களின் நல்வாழ்விற்குச் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்குத் தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள் கேடயம் வழங்கிப் பாராட்டினார்.



சோவியத் ரஷ்யாவின் நீதித்துறை அமைச்சர் திரு. டெரிபிலோவ் அவர்கள் கிண்டியில் உள்ள பாம்புப் பண்ணையை 31-3-76 அன்று பார்வையிட்டபோது, ஒரு பாம்பை எடுத்து கழுத்தில் மாலையாக அணிந்துகொண்டார்.



திருமங்கலத்தில் நடைபெற்ற அரசினர் இலவசக் கண்சிகிச்சை முகாமில், கண்சிகிச்சைச் செய்துகொண்டவர்களுக்கு 30-3-76 அன்று திரு. பி. கே. தவே அவர்கள் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கினார்.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வி. கார்த்திகேயன் அவர்கள், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் அவர்களிடமிருந்து 11-3-76-ல் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

# வள்ளுவர் என்னும் வள்ளல்



திருக்குறள் இன்று உலகப் பொது மறையாகத் திகழ்கிறது. இருபத்து நான்கு மொழிகளில் அது மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. தமிழில் உள்ள காப்பியங்கள் பல, ஓர் இனத்துக்காக அல்லது ஒரு சமயத்துக்காக எழுந்துள்ளன. ஆனால் திருக்குறள் ஒன்றுதான் ஒரு தமிழன் உலகத்துக்காக எழுதிய ஒப்பற்ற நூலாக விளங்குகிறது. அது மட்டுமல்ல, இன்ன சமயத்துக்காக எழுதப் பெற்றது என்று அதனை எவராலும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. அனைத்துலகும் ஏற்றுக் கொள்கின்ற வகையில் திருக்குறளை வழங்கியுள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

வள்ளுவரின் பெருமை குறித்து அண்மைக் காலக் கவிஞர்—விடுதலை வேள்வியில் ஈடுபட்ட கவிஞர்—சுப்பிரமணிய பாரதியார்,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று உவகையுடன் குறிப்பிடுகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுள்ள ஜி.யு. போப் அவர்களின் வெளியிடப்பெறாத கையெழுத்துப் பிரதியில் (Unpublished manuscript of G.V. POPE) கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஏசு கிறிஸ்து அன்பு நெறியை உலகுக்குக் கூறினார். 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு'' என்று வேண்டினார். ஆனால், திருவள்ளுவரோ ஏசு கூறிய அன்பு நெறியினும் மேம்பட்ட அன்பு நெறியைப் போதிக்கிறார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்று கூறியதன் வாயிலாகப் பகைவர்கள் நாண அவர்க்கு நன்மை செய்யத் தூண்டுகிறார். ஏசுவையும் திருவள்ளுவரையும் ஒப்பிடுங்கால் திருவள்ளுவர் ஏசுவை விட ஓர் அங்குலம் உயரமானவராகவே காணப் பெறுகிறார். ( While Comparing Jesus with Thiruvalluvar, the later is one inch highter than the former ).

இவ்வாறு பலராலும் பாராட்டப் பெறும் வகையில் நீதி நூலை வழங்கிய வள்ளுவர் ஒரு வள்ளலாகத் திகழ்கிறார். அவருக்குப் பின்னர் வந்த புலவர் பெருமக்கள் தமது நூல்களில் வள்ளுவரின் கருத்துக்களை எடுத்துக் கொள்ள வகை செய்ததன் வாயிலாகத் திருவள்ளுவர் வள்ளலாக விளங்குகிறார். ஒரு சில புலவர்கள், வள்ளுவரின் கருத்தை மட்டுமல்ல, சொற்றொடர்களை அப்படியே தமது நூல்களில் எடுத்தாண்டுள்ளனர்.

சிலப்பதிகார நூலாசிரியரிலிருந்து, அண்மைக் கால கவி பாரதி வரை, வள்ளுவரின் குறளைத் தமது நூல்களில் எடுத்தாண்டுள்ளனர்; அவ்வாறு எடுத்தாளப்பட்ட வரிகளை இங்கே நோக்குவோம்.

ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையானதாக இடம் பெற்றுள்ளது சிலப்பதிகாரம் ; சேரன் செங்குட்டுவ மன்னனின் இளவல் இளங்கோவடிகளால் யாக்கப் பெற்ற இனிய தமிழ்க் காப்பியம் ; அந்தக் காப்பியத்தில் திருக்குறளின் கருத்துக்களும், சொற்றொடர்களும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. தமக்கு முன்னோராகிய வள்ளுவரின் பொன்னுரையை அன்புடனும் ஆர்வத்துடனும் எடுத்தாண்டிருக்கிறார் இளங்கோவடிகள்.

குழந்தைச் செல்வத்தின் பெருமை குறித்துப் பேச வந்த திருவள்ளுவர் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்:

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்

இந்த அருங்கருத்து இளங்கோவடிகளின் அகத்தைத் தொட்டிருக்கிறது. எனவே, தாம் துறவியாக இருந்த போதிலும் கூட, கண்ணகியின் மழலைப் பேச்சைப் பெருமைப்படுத்திக் கூறுகிறார். கண்ணகி தன் கையிலே ஒரு கிள்ளையை வைத்து, அதற்கு மொழிப் பயிற்சி நடத்துகிறாள்; கண்ணகியின் மழலையைக் கேட்ட கிளி, தனக்கு அது போன்று பேச வரவில்லையே என்று ஏங்கியதாகக் குறிப்பிடுகிறார் இளங்கோ; அவரது வரிகளில் வள்ளுவர்



குறளின் எதிரொலி தோன்றுகிறது ; அதனைப் பார்ப்போம் :

குழலும் யாழும் அமுதும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்குவருந்தின வாகியும்

சிலப்பதிகார ஆசிரியரை அடுத்து, மணிமேகலை ஆசிரியரான சீத்தலைச் சாத்தனாரும் திருவள்ளுவ ரின் திருக்குறளில் ஆழ்ந்திருக்கிறார் என்பதை, அவர்தம் காவியம் இனிதுற விளக்குகிறது.

திருவள்ளுவர், 'பிறவியை ஒழிக்க வேண்டும்' என்றும், 'அதற்கு இறைவனடி நாடுதல் வேண்டும்' என்னும் கொள்கை கொண்டவர். அதனால் தமது குறளில்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேரா தவர்.

எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தை, சீத்தலைச் சாத்தனார் தமது மணி மேகலையில், அறவண அடிகள் வாயிலாக உணர்த்து கிறார்.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது—பின்னது
அற்றோர் உறுவது அறிக....

சிலப்பதிகார ஆசிரியர், மணிமேகலை ஆசிரியர் ஆகியோரைப் போன்றே 'சீவக சிந்தாமணி' ஆசிரியர் 'திருத்தக்க தேவ'ரும், தேவர் திருக் குறளைத் தமது நூலில் எடுத்தாண்டிருக்கிறார். குறளில் தோய்ந்து எழுந்தவர் சிந்தாமணி ஆசிரியர் என்பதை நம்மால் உணர முடிகிறது. இளங்கோ வடிகளும், சாத்தனாரும் ஆசிரியப் பாவில் எழுதி னால், திருத்தக்க தேவர் குறளின் கருத்துக்களை விருத்தத்தில் வடித்துத் தந்திருக்கிறார்.

ஒரு தந்தைக்கு மகன் ஆற்றவேண்டிய கட மையை எடுத்துரைக்க வந்த திருவள்ளுவர் குறிப் பிடுகிறார் :

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்

இதே கருத்தை விருத்தத்தில் எடுத்துரைக்கிறார் திருத்தக்க தேவர்.

கட்டியங்காரன் என்பான் கவர்ந்து சென்ற ஆநிரைகளை சீவகன் மீட்டு வருகிறான். அப்போது, சீவகன் திறம் குறித்து மக்கள் வாழ்த்துவதாக அமைந்த பாடலைப் பார்ப்போம்.

செம்மலைப் பயந்த நற்றாய்
செய்தவம் உடையார் என்பார்
எம்மலைத் தவம்செய் தாள்கொல்
எய்துவம் யாமும் என்பார்...

அடுத்து வள்ளுவரின் குறளைக் கவிச் சக்கர வர்த்தி கம்பர் எவ்வாறு தமது நூலில் எடுத்தாண் டுள்ளார் என்று பார்ப்போம். கல்வியிற் பெரியவர் கம்பர்—எனப் புகழ் பெற்ற கம்பருக்கு, வள்ளுவர், கவிதை வரிகளைக் கடனாகத் தந்திருக்கிறார்.

தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் தமக்குள் பேசிக் கொள்ளமாட்டார்கள் என்றும், அவர்களது கண்களே பேசிக் கொள்ளும் என்றும் குறிப்பிட வந்த வள்ளுவர் கூறுகிறார்.



கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல — என்று.

கம்பர் தமது இராம காதையில் இந்தச் சொற்றொடரை அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

இராமனும் சீதையும் ஒருவரை யொருவர் சந்தித்த முதற் காட்சியில் அவர்கள் இருவரது மெய்ப்பாட்டுணர்வுகளையும் தெரிவிக்க நினைத்த கம்பர் குறிப்பிடுகிறார் :



எண்ணரு நலத்தினாள் இனையன் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்(று)
உண்ணவு நிலைபெரு துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்

திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்குநூல்களுள் ஒன்று. இதனைப் பின்பற்றி எழுந்த நாலடியார் என்னும் நீதி நூல், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் மற்றொன்றாகும். நாலடியாரில் திருக்குறளின் கருத்துகள் மிகுந்து காணப்படுகின்றன.

கல்வியின் சிறப்பை எடுத்துரைக்க வந்த வள்ளுவர் குறிப்பிடுகிறார் :

கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இதனை நாலடியார் வேறு வகையில் எதிரொலிக்கிறது. அதனைப் பார்ப்போம் :

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல ; நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு

திருமலை மன்னரின் வேண்டுகோளை ஏற்று, திருக்குறள் போல் அரியதொரு நூலாம் 'நீதிநெறி விளக்க'த்தை உருவாக்கிய குமரகுருபரர் அந்நூலில், கல்வியின் பெருமையை எவ்வாறு கழலுகிறார் என்று பார்ப்போம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினுங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை

கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் இறைவனின் திருக்கல்யாண குணங்களையும், அவனடி தொழுவதால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துரைக்க வந்த வள்ளுவர் குறிப்பிட்டார் :

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

இதே கருத்துக்களையும் சொற்றொடர்களையும் மிக மகிழ்ந்து பயன்படுத்தியிருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார் தமது ''கந்த புராணம்'' என்னும் நூலில், அதனைப் பார்ப்போம் :

ஊரி லான்குணம் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்இலான்
பின்இலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான்
மேல்இலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றான்.

மக்கட் பேற்றின் பெருமையைக் குறிப்பிட வந்த வள்ளுவர், அதனை மிகச் சிறப்பாகத் தெரிவித்தார்.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு

இதே கருத்தை வில்லிப்புத்தூரார் தமது 'வில்லி பாரதத்தில்' பாண்டு மன்னனின் வாயிலாக நயம்பட எடுத்துரைத்தார்.



கல்லா மழலைக் கனியூறல் கலந்துகொஞ்சம்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமைஎன்னும்?

திருவள்ளுவரின் மேற்சொன்ன கருத்தைப் புகழேந்திப் புலவர் தமது 'நலவெண்பா'வில் எடுத்தாண்டிருக்கிறார். அதனைப் பார்ப்போம் :

பொன்னுடைய ரேனும புகழுடைய ரேனும்மற்று
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையீங் கில்லா தவர்.

இதே கருத்தைப் 'புறநானூற்றில்' உள்ள 'பாண்டியன் அறிவுடை நம்பியின்' பாடலிலும் காணலாம் : அது வருமாறு :

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கல்வியும் சூழ்ந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழு நாளே

வள்ளுவரின் கருத்தை, தாயுமானவர் 'உலக வழக்கில்' மிக எளிமையான சொற்களால் கூறி விடுகிறார்: அதனைப் பார்ப்போம் :

பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம்; பிள்ளை
பெருமலடி அறிவாளோ ?

புலவர்களைச் 'சொல்லேருழவர்' என்று சிறப்பித்துச் சொல்கிறார் வள்ளுவர். புலவர் தம் பெருமையையும் அவரிடம் மாற்றார் பகை கொள்ளக் கூடாது என்பதையும் வள்ளுவர் எடுத்துக் காட்டும் செய்யுள் வருமாறு :

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

இந்தச் சொல்லேருழவர் பகை என்ற சொற்றொடர் 'தமிழ் விடு தூது' என்னும் நூலாசிரியரான மதுரைச் சொக்கநாதரின் உள்ளத்தில் இடம்பெற்று விட்டது. எனவே தமது நூலில் அதனை எடுத்தாள்கிறார். தமிழின் பெருமை குறித்துக் கூற வந்த இடத்தில் அவர் குறிப்பிடுகிறார்'.

நல்லேரி னுற்செய்த நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லே ருழவர் தொகுத்தீண்டி

'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்தில், இன்சொல்லின் பெருமையைக் கூற வந்த திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் :

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

இதே கருத்தை, 'சிவப்பிரகாசர்' தமது 'நன்னெறி' என்னும் நூலில் வேறு வகையில் எடுத்துரைக்கிறார் :

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்.

ஒரு மனிதனுக்குப் பெருமையும் சிறுமையும் எதனால் வருகின்றன என்பதைத் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

ஒரே வரியில் இந்தக் கருத்தை அதிவீரராம பாண்டியர் தமது 'நறுந்தொகையின்' வாயிலாக எடுத்துரைக்கிறார்.

பெருமையும் சிறுமையும் தாள்தர வருமே

இருபதாம் நூற்றாண்டுப் புலவரும், விடுதலை வேள்வியில் ஈடுபட்ட மாபெரும் கவிஞருமாகிய சுப்பிரமணிய பாரதியார் வள்ளுவர் குறளை நன்கு பயின்றிருக்கிறார் என்பதை, அவர்தம் குறள் மேற்கோள்களால் எளிதில் உணர முடிகிறது.

'இரவச்சம்' என்னும் பகுதியில், புரட்சிகரமான கருத்தைக் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார் திருவள்ளுவர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டில் பரந்து
கெடுக உலகியற்றி யான்

'ஒருவன் பிச்சையெடுத்து உயிர்வாழ நேர்ந்தால், இந்த உலகத்தை உருவாக்கிய இறைவன் உடனே அழிந்தொழுக' என்று வியங்கோள் வினைமுற்றில் கூறுகிறார் :

இதே கருத்தை இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பாரதியார், வள்ளுவரை விட வேகமாகச் சொல்கிறார்.

இனி ஒரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனிஒருவனுக் குணவில்லை—எனில்
சகத்தினை அழித்திடுவோம். —என்கிறார்.

வள்ளுவர் இரக்கும் சூழ்நிலையை ஒருவனுக்கு உருவாக்கிய இறைவன் தானே ஒழிக என்று சொன்னால், பாரதியோ அவனை ஒழிப்போம் என்று கூறுகிறார்.

இவ்வாறு, திருவள்ளுவரின் குறள், வழிவழியாக, பின்னர் வந்த புலவர்களால் எடுத்தாளப்பட்டு, கற்போர்க்கு இன்பத்தை வழங்கிவருவது கண்கூடு.

—புலவர் சண்முகசுந்தரம்

# இணையற்ற இருபது அம்சம்

## திருமதி பாப்பா





சமதர்மச் சமுதாயம் சமைத்திடவே தீட்டும்
சத்தான இருபதம்சம் சாற்றுகிறேன் கேளீர்!
சுமையான விலைவாசி குறைத்திடுதல் ஒன்று;
சுவையுணவுப் பொருள்விளையும் நிலம்பகிர்தலி ரண்டு;
தமக்கில்லம் இல்லையெனில் வீடுதரல் மூன்று;
தயவில்லாக் கொத்தடிமை முறைநீக்கல் நான்கு;
பகைக்கும் கடன்சுமையைத் தணித்துவிடல் ஐந்து
வயலகத்துத் தொழிலாளர் நிலைஉயர்த்தல் ஆறு.

குடியுயர நிலத்தடிநீர் பெருக்குதல்தான் ஏழு
கொண்டஅனல் மின்நிலையம் கட்டிடுதல் எட்டு
கடிதினிலே கைத்தறியைக் காப்பதொன்ப தாகும்
கடமையுடன் மலிவுத்துணித் தரங்கூட்டல் பத்தாம்!
உடமையெனத் திகழ்கின்ற நகரமனைக் கெல்லாம்
உச்சவரம் பெனக்கொணர்தல் பதினொன்றே யாகும்!
நெடிதுநாள் வரிஏய்க்கும் நீசர்தம் மேலே
நிகழ்த்துகின்ற நடவடிக்கை பன்னிரண்டே யாகும்!

பெருங்கடத்தல் தனைத்தடுத்தல் பதின்மூன்றே யாகும்
பெருமைமிகு இறக்குமதித் தொழிலினிலே ஊழல்
பெருகாது நீக்கிவிடல் பதினான்கே! நாட்டில்
பாட்டாளி நிருவாகப் பங்குபெறும் நேர்த்தி
சிறப்பான பதினைந்தாம்; தேசமட்டம் தன்னில்
சாலைப்போக்கு வரத்தனுமதி பதினாறே யாகும்!
வருமான வரிவரம்பெண் ணாயிரமென் றிங்கே
வகையாகத் திட்டமிடல் பதினேழாம்! சொல்வோம்.

வருங்காலச் சிற்பிகளாம் மாணவர்கள் எல்லாம்
வடிவான விடுதிகளில் பயில்கின்ற போது
பெறுகின்ற பொருள்விலைக்குக் கட்டுப்பா டென்னல்
பதினெட்டாம்; அவர்பயிலப் புத்தகங்கள் தம்மைக்
குறுவிலையில் வழங்கிடுதல் பத்தொன்ப தாகும்!
குவலயத்தில் அவர்வாழ்வு முன்னேற்றம் காண
உருவாக்கும் தொழிற்பயிற்சி இருபதென்போம்; நாட்டின்
உயிர்மூச்சே இருபதம்சம் எனச்சொல்வோம்! உய்வோம்!



# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

நெ. எக்ஸ். 406.

**14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007**

தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலைவர் : **திரு. பழனிவேல்ராஜன், பி.எஸ்.ஸி., பி.எல்.,**

உப-தலைவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி, எம். ஏ.,**

---

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் .. | ரூ. | 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் .. | ரூ. | 3,09,02,125/- |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை .. | ரூ. | 25,66,31,157/- |

---

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

| | | |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு .. | ரூ. | 30,000/- |
| புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) .. | ரூ. | 10,000/- |

**பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.,**
இணைப்பதிவாளர்—செயலாளர்.

---

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.

## சேலம்-1.

**தபால் பை எண். 171** — **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** — **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$% |

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$%

**நடப்புக் கணக்கு $\frac{1}{2}$%** — **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**கி. பாலசுந்தரம், பி.ஏ.,** துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.

**பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி.,** காரியதரிசி.

**எஸ். ஆறுமுகம்,** தலைவர்.




# தரமான பொருள் தருவோம்! குறைவான விலை பெறுவோம்!

"இன்றியமையா உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைத்திட வேகமான முயற்சிகள், நடவடிக்கைகள்; உற்பத்தி உயர்வு; பண்டக் கொள்முதல் பணியினை விரைந்து செயலாற்றுதல்; இன்றியமையாப் பொருட்களின் வழங்கு முறைகளைச் சீராக்குதல்''

''மாணவர் விடுதிகளுக்கு, இன்றியமையாத உணவுப் பொருட்களைக் கட்டுப்பாடு விலையில் வழங்குதல்''

—இவை நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அறிவித்துள்ள இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்திலுள்ள 1-வது, 18-வது திட்டங்களிலுள்ள வாசகங்களாகும்.

இவ்விரு திட்டங்களையும் தீவிரமாகச் செயல்படுத்த ''தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்'' (Tamil Nadu Civil Supplies Corporation Limited) முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் சீரிய பணிகள், விரைவான நடவடிக்கைகள் தமிழக மக்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மை அளிப்பனவாக அமைந்துள்ளன.

**நுகர்பொருள் வாணிபக் கழகம்!**

ஏழை எளியோர் நடுத்தர மக்கள், வாழ்க்கையில் சற்று வசதியை இழந்தவர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாத்திடவும், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் குறைந்த விலையிலும், சீரான முறையிலும் விநியோகம் செய்திடவும் தோற்றுவிக்கப் பெற்ற தொரு நிறுவனம்தான், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

வாணிப முறைகளைச் சீரமைக்க வேண்டும்; அதிலும் வெளிச் சந்தை வாணிபத்தைச் செம்மையான வகையில் செயல்படுத்திட வேண்டும்; நேரங்களுக்குத் தகுந்த வகையில் அரிசி, நெல் விலைகளை நிலைப்படுத்திட வேண்டும்; தரமான பொருட்களையே வழங்கிட வேண்டும் என்கின்ற எண்ணங்களின் அடிப்படையிலே 1972-ஆம் ஆண்டில் இக்கழகம் துவக்கப் பெற்றது. ஆனாலும், இதனுடைய பணிகள், செயல்முறைகள், நடவடிக்கைகள் தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர் விரைவுபடுத்தப்பட்டன - தீவிரமாக்கப்பட்டன என்பதை இங்கே நாம் குறிப்பிட வேண்டும்.

### நோக்கம்

இக்கழகம் கொண்டுள்ள குறிக்கோள்களில் முதன்மையானது கொள்முதலும் விநியோகமுமாகும். நெல், அரிசி, கோதுமை, ரவை, மைதா, உணவுதானியங்கள், பயறு வகைகள், மிளகாய் வற்றல், எண்ணெய் வகைகள், வனஸ்பதி, குழந்தை உணவு மற்றும் சத்துணவுப் பொருட்கள், நுகர்வோர்களுக்குத் தேவையான ஏனைய பொருட்கள் போன்றவைகளைக் கொள்முதல் செய்வதன் மூலம் பெற்று, அவைகளைக் குறைந்த விலையிலும், சீரான முறையிலும் வழங்கி வருவதைப் பெரும்பணியாகக் கொண்டுள்ளது.

### கொள்முதல்

#### நெல்லும், அரிசியும்

மக்களின் அன்றாட வாழ்வில் உணவு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. எனவே மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்



களை வழங்குவதைக் கடமையாகக் கொண்டுள்ள அரசு, முக்கியமான உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து அவைகளைச் சீராக விநியோகம் செய்வதில் காட்டிவரும் தீவிரத்தை அனைவரும் அறிவர்.

நெல்கொள்முதலில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த ஏஜெண்டாக நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு வருகிறது. லெவி மற்றும் வெளிச் சந்தையில் வாங்குவதன் மூலம் நெல் கொள்முதலைச் சீராகச் செய்து வருகிறது. சிற்சில பகுதிகளில் உள்ளூர் கொள்முதலில் கூட்டுறவுச் சங்கங்களும், இந்திய உணவுக்கழகமும் ( F C I ) இக்கழகத்தினுடைய ஏஜெண்டுகளாகச் செயல்படுகின்றன. அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்முதலால் உண்மையில் ஏற்படுகின்ற பலன்கள் உற்பத்தியாளர்களுக்கே செல்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே, ஏராளமான 'நேரிடையாக வாங்கும் மையங்கள்' இயங்குகின்றன. பொதுவாக, மொத்தக் கொள்முதலும் இக்கழகத்தினுடைய கணக்கிலே மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் நன்கு பதப்படுத்தப்பெற்று, தரம் மிகுந்த அரிசியாக அரைக்கப்படுகின்றது. இந்தப் பணிகளில் இக்கழகத்திற்குச் சொந்தமான 13 நவீன ஆலைகள் ஈடுபட்டுள்ளன. இவைகள் மட்டுமின்றி ஏராளமான தனியார் நிறுவனங்களைச் சார்ந்த அரிசி ஆலைகளும் இப்பணிகளைச் சீரான முறையில் மேற்கொண்டு வருகின்றன. இக்கழகம் தமிழகம் முழுமைக்கும் ஏறத்தாழ 853 அரிசி அரைவை ஏஜெண்டுகளை நியமித்துள்ளது. கூட்டுறவுத் துறையினரிடமிருந்து இக்கழகத்தால் மேற்கொள்ளப் பெற்ற இந்த 13 நவீன அரிசி ஆலைகள் சிலபல காரணங்களால் முழு அளவிற்குச் செயல்பட முடியவில்லை. இவைகளை முழு அளவிற்குச் செயல்படுத்திடவும், திறமையாக இயக்கிடவும், தரமான அரிசியைத் தயாரித்திடவும் தேவையான எல்லாவித நடவடிக்கைகளையும் இக்கழகம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் சீராக இயங்குவதற்கென இக்கழகம் மூன்று 'மெக்கானிக்கல்' என்ஜினியர்களை நியமித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சாதனை

இக்கழகம் இதுவரை அதிக அளவில் அரிசிக் கொள்முதல் பணியினை மேற்கொண்டு வந்துள்ளது. 1973-ஆம் ஆண்டில் 27,709 டன்கள் சம்பா அரிசியும் 18,213 டன்கள் குறுவை அரிசியும், 1974-ஆம் ஆண்டில் 1,33,522 டன்கள் சம்பாவும், 1,39,707 டன்கள் குறுவையும், 1975-ஆம் ஆண்டில் 2,44,098 டன்கள் சம்பாவும், 3,55,159 டன்கள் குறுவை அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டன. ஆனால் 1976-ஆம் ஆண்டில் இன்று வரை மிகக் குறுகிய காலத்தில் 3,76,403 டன்கள் சம்பா அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். இதில் தனியார் ஏஜெண்டுகள், நெல் அரைவைக்கென மற்ற மாவட்டங்களுக்கு நெல் கொண்டு செல்வதை அறவே அகற்றியுள்ளது இக்கழகத்தினுடைய குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

### கோதுமை, மைதா, ரவை மற்றும் சர்க்கரை

மாநிலம் முழுமைக்கும் தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பெற்றுள்ள ஒரு நிறுவனமாக இக்கழகம் செயல்படுகிறது. கோதுமை, கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள் (ரவை, மைதா) சர்க்கரை போன்றவைகளைக் கொள்முதல் செய்து, அவைகளைச் சிறப்பான முறையில் பாதுகாத்து, சீரான வகையில் விநியோகிக்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

கொள்முதல் செய்யத் துவங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் இதன் பணிகள் வேகமாகவே நடைபெற்று வருகின்றன. 1972-ஆம் ஆண்டில் 2,983 மெட்ரிக் டன் கோதுமை, 1973-ஆம் ஆண்டில் 7,074 மெட்ரிக் டன் கோதுமையும், 52,610 மெட்ரிக் டன் கோதுமை தயாரிப்புப் பொருட்கள், 1,02,568 மெட்ரிக் டன் சர்க்கரையும், 1974-ஆம் ஆண்டில் 36,324 மெட்ரிக் டன் கோதுமை, 79,015 மெட்ரிக் டன் கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், 1,19,692 மெட்ரிக் டன் சர்க்கரையும், 1975-ஆம் ஆண்டில் 4,96,000 மெட்ரிக் டன் கோதுமை, 1,29,000 மெட்ரிக் டன் கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், 1,38,314 மெட்ரிக் டன் சர்க்கரையும்



கைக்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டில் இன்றைய நாள் வரையில் 500 மெட்ரிக்டன் கோதுமை, 54,000 மெட்ரிக் டன் கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், 40,664 மெட்ரிக் டன் சர்க்கரையும் கைக்கொள்ளப் பெற்றுள்ளன.

நெல், அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற இன்றியமையா உணவுப் பொருட்களோடு பயறு வகைகள், மிளகாய் வற்றல், எண்ணெய் வகைகள், குழந்தை உணவு, சத்துணவு, சோப்புகள் போன்ற அவசியமான பொருட்களேயும் கொள்முதல் செய்து நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

### பயறும் மிளகாயும்

நம்முடைய மாநிலம் பயறு வகைகளேப் பொறுத்த மட்டில் எப்பொழுதும் பற்ருக்குறையிலே காணப்படுகிறது. இத்தகு பற்ருக்குறையினேச் சமாளிப்பதற்கென ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற உபரி விளேச்சல் மாநிலங்களிலிருந்து பயறு வகைகளே இறக்குமதி செய்து வருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிடமிருந்து அதிக அளவில் பயறு வகைகளேக் கொள்முதல் செய்துள்ளது.

அறுவடைக் காலத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து பயறு வகைகளேக் கொள்முதல் செய்து அவைகளேப் பருப்பு வகைகளாக மாற்றிட, தகுந்த நடைமுறைகளேயும் கடைப்பிடித்து வருகின்றது. பருப்புகள் தரம் மிகுந்ததாகவும், பூச்சிகளால் கெடாதவாறும் நன்கு பாதுகாக்கப்பெற்று, பொதுமக்களுக்கு தகுந்த விலேயில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளேயும் மேற்கொண்டுள்ளது.

நியாயமான விலேயில் மிளகாய் வற்றலே வழங்கிடும் பணியினேயும் மேற்கொண்டுள்ளதால் 1974 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரிடையாகவே கொள்முதல் செய்தது. நுகர் பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் அனேத்திலும் கிடைத்திடச் செய்யும் விதத்தில் இருப்பையும் சீராகப் பாதுகாத்து வருகின்றது.

### பொது மக்களுக்கு வழங்கிட...

உணவுப் பொருள்கள் கொள்முதலில் சாதனே கண்டுவிட்டால் மட்டும் போதுமா? அவைகளேப் பொதுமக்களுக்கு வழங்குவதிலும் சாதனேயைக் காட்டிட வேண்டுமல்லவா? எனவேதான் கொள்முதல் செய்யப்படுகின்ற உணவுப்பொருட்கள் நன்கு பாதுகாத்துத் தரம் மிகுந்த, சுத்தமான பொருட்களாகவும், ஏழை-எளியோர், நடுத்தர மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற வகையில் குறைந்த விலேயிலும் விநியோகம் செய்வதற்கான எல்லாவித நடவடிக்கைகளேயும் இக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இக்கழகத்தின் செயல்முறைகள், நடவடிக்கைகள் மொத்த வியாபாரத்திற்காக மட்டும் வரையறுக்கப் பெறவில்லே. சில்லறை வாணிபத்தை எத்தகைய முறையில் செயல்படுத்திட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் மாநிலத்தில் முக்கியமான இடங்களில் 'சில்லறை அங்காடி' களே நிறுவியுள்ளது. இந்த வகையில் தமிழகத்தில் நிறுவப்பெற்றுள்ள சில்லறை அங்காடிகளின் எண்ணிக்கை 589 ஆகும். இதனுல் ஏறத்தாழ 10,07,000 கார்டுதாரர்கள் பயன் பெறுகின்றனர்.

இத்தகு முறையில் சில்லறை அங்காடிகளே நிறுவியதன் மூலம் தனியார் சில்லறை அங்காடிகளே முற்றியும் நீக்கியுள்ளது குறிப்பிடத் தகுந்ததொரு சாதனேயாகும். இந்த வகையில் சென்னே நகரில் 200 புதிய அங்காடிகள் மிகக் குறுகிய காலத்தில் நிறுவப் பெற்றுள்ளன. தற்பொழுது சென்னே நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் செயல்பட்டு வரும் சில்லறை அங்காடிகளின் எண்ணிக்கை 294 ஆகும். இந்த வகையில் சுமார் 5,17,000 கார்டுதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். நெரிசலேத் தவிர்ப்பதற்கும், நுகர்வோர்களுக்குத் தேவைமிகுந்த வசதிகளே நல்குவதற்கும் ஏற்ற வகையில் ஓர் அங்காடிக்கு 1,500 முதல் 2,000 கார்டுகள் வரை சேர்க்கப் பெற்றுள்ளன.

விநியோகம் செய்யப்படுகின்ற பொருட்கள் தரம் மிகுந்ததாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். விநியோகத்தில் சீரான முறையினேக் கையாள வேண்டும் என்கின்ற குறிக்கோளின் அடிப்படையில் இக்கழகத்தினுடைய 'விநியோகப் பிரிவு' பெரும்பங்கு ஏற்று சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.




### தாராளமாய்க் கிடைக்கும் தரமான பொருட்கள் !

வழங்கப்படுகின்ற பொருட்கள் தரம் மிகுந்தனவா என்பதை உறுதிப்படுத்திடுவதற்கென தரக் கட்டுப்பாடு நிர்ணயமும் செய்யப்பட்டு வருகின்றது. கொள்முதல், பதப்படுத்துதல், சேமித்துக் காத்தல், விநியோகம் செய்தல் என்பன போன்ற வேறுபட்ட பகுதிகளில் தரக்கட்டுப்பாட்டினேத் திறன் வாய்ந்த ஒன்ருகவும் ஆக்கி வருகின்றது. இத்தகு இடங்களில் தேர்ச்சி பெற்ற தரக்கட்டுப்பாட்டு வல்லுநர்கள் நியமனம் செய்யப் பெற்றுள்ளனர்.

## சேமிப்பில் புதிய முறை..

இந்த ஆண்டு, நமக்கெல்லாம் நல்வாழ்வினை அளிக்கின்ற ஓர் ஆண்டாகும். ஆம்! இந்த ஆண்டில்தான் நாம் மிகு விளைச்சலைப் பெற்றுள்ளோம். மிகு விளைச்சலைப் பெற்ற தன் விளைவு...? உணவு தானியங்களை-குறிப்பாக அரிசியைச் சேமித்து வைப்பதே பெரும் பிரச்சினையாகிவிட்டது. எனவே, இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணுகின்ற வகையில் 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்'' புதியதொரு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய முறை ''கேப் ஸ்டோரேஜ்'' ( Cover and Plinth Storage ) என அழைக்கப்படுகிறது.

இந்த முறையில், திறந்த வெளியிலேயே உணவு தானியங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க முடியும். இத்தகு சிறப்பு வாய்ந்த இந்த முறை முதன்முதலாக சென்னை மாநகரிலுள்ள தங்கச்சாலை உணவுக் கிடங்கின் திறந்த வெளியில் உருவாக்கப் பெற்றுள்ளது.

முதலில் திறந்த வெளியில் குறிப்பிட்ட பரப்பில் பிளாட்பாரங்கள் எழுப்பப்படுகின்றன. பிளாட்பாரத்தின் அடிப்பாகம் மரச் சட்டங்களால் சீராகப் பொருத்தப்படுகின்றன. கீழ் அடுக்குகளில் உணவு தானியங்கள் சிந்துவதையும், சிதறுவதையும் தவிர்க்கும் பொருட்டு அவைகளின் மீது பாலிதீன் தாள்கள் விரிக்கப்படுகின்றன. இப்பாலிதீன் தாள்களின் முனைப்பகுதிகள் நன்கு மடிக்கப்பட்டு பின்னர் அவைகள் சுமார் இரண்டு மூட்டைகளின் உயரத்திற்கு மூடப்படுகின்றன.

அரிசி மூட்டைகள் நன்கு வரிசையாகக் குறிப்பிட்ட எண்ணிக்கைகளின் அளவிற்கு அடுக்கப்பெற்ற பின்பு, அடுக்குகள் முழுவதும் பாலிதீன் உறைகளால் மூடப்பட்டுவிடுகின்றன. பின்னர் அடிப்பாகம் முழுதும் நன்கு முத்திரையிடப்படுகின்றன.



இந்த முறையினைக் கையாளுவதின் மூலம் சரக்குகள் மழை, வெய்யில் போன்றவைகளினின்று காக்கப்படுகின்றன. சரக்குகளில் பூச்சி சேராதவாறு, உணவுக் கிடங்குகளில் எவ்வாறு தடுக்கப்படுகின்றனவோ அத்தகைய முறைகளில் இங்கும் தடுக்க வாய்ப்புண்டு. பராமரிப்பு மற்றும் இதரச் செலவுகளும் இந்த முறையைக் கையாளுவதன் மூலம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இங்கே 9 குவியல்கள் அமைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு குவியலும் ஏறத்தாழ 1,800 மூட்டைகளைக் கொண்டவை. இந்த வகையில் இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ள அரிசியின் அளவு ஏறத்தாழ 1,000 டன்களாகும்.

தங்கச்சாலை, உணவுக் கிடங்கில் உருவாக்கப் பெற்றுள்ள இந்த 'கேப் ஸ்டோரேஜ்' முறையினை அண்மையில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா. அவர்கள் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவியல் முறைகளின் அடிப்படையிலே தரக்கட்டுப்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கொள்முதல் செய்யப்படுகின்ற உணவு தானியங்கள் சேமிப்புக் கிடங்குகளிலும், விநியோகம் செய்கின்ற இடங்களிலும், பதப்படுத்திடும் நிலைகளிலும் தரம் மிகுந்ததாகவேகாணப்படுகின்றன என்பதைத் தரக் கட்டுப்பாட்டு வல்லுநர்கள் உறுதி செய்கின்றனர்.

பொருட்களின் தரக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதற்கெனத் தமிழகத்தில் 11 ''மண்டல பகுப்பாய்வுக் கூடங்கள்'' செயல்பட்டு வருகின்றன. சென்னை நகரில் மைய ஆய்வுக்கூடம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. இது முழுமையாக நவீன சாதனங்களைக் கொண்டு இயங்குகின்றது. தகுதி வாய்ந்த-பயிற்சி பெற்ற தொழில் நுட்பதாரர்களால் இங்குத் தரக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்படுகின்றது. இதற்குத் தொழில் நுட்ப அலுவலர் ஒருவரும் துணைபுரிக்கின்றார்.

உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்ற இடங்களிலிருந்தும், அவைகளைச் சேமித்து வைக்கும் கிடங்குகளிலிருந்தும் மாதிரிகள் இந்த ஆய்வுக்கூடத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. சரியான-திறன் வாய்ந்த கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் தான் உணவுப் பொருட்கள் சில்லறை அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன. இங்கு நெல், அரிசி, உணவுதானியங்கள், கோதுமை, கோதுமைத் தயாரிப்புப் பொருட்கள், ஆகியவைகளின் தரக்கட்டுப்பாடுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் வகைகளின் தரக்கட்டுப்பாடுகளையும் நிர்ணயம் செய்வதற்கான வசதிகளும் இங்குண்டு.

### நுகர்வோர் நலனுக்காக !

தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமலுக்கு வந்த பின்னர் இன்றியமையாப் பொருட்களின் விலை குறைப்பு, சீரான விநியோகம் போன்றவைகளில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. சென்னை நகரில் வாழ்கின்றவர்களின் தேவையை நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் தீர்த்து வருகின்றன. இக்கழகத்தின் விநியோகப் பிரிவு (Distribution Section) இப்பணிகளைச் சிரமேற் கொண்டு பாராட்டத் தகுந்த அளவில் பணியாற்றி வருகின்றது.

நுகர்வோரின் நலன்களைப் பாதுகாத்திட வேண்டும்; அவர்

களுக்குத் தேவையான உணவு மற்றும் இன்றியமையாப் பொருட்களின் விநியோகம் சீராகச் செயல்பட வேண்டும் என்பவைகளைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இதில் அன்றாடம் 'விநியோக அலுவலர்கள்' (Distribution Officers) சில்லறை அங்காடிகளைப் பார்வையிட்டு விநியோகப் பொருட்களின் இருப்பு போதிய அளவில் உள்ளனவா? பொருட்கள் சுத்தமாக வழங்கப்படுகின்றனவா? பொது மக்கள் சிரமமின்றி உணவுப் பொருட்களைப் பெறுகின்றனரா? என்பன போன்றவைகளைக் கண்டறிந்து அதற்குரிய நட்வடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகின்றனர்.



அங்காடிகள் சுத்தமாகவும் சிறப்பாகவும் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்கின்றனர். தினந்தோறும் அரிசி, கோதுமை, உணவு தானியங்கள், பருப்பு வகைகள் நன்கு சுத்தம் செய்யப் பெற்று பின்னர் கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சென்னை நகர மக்களின் ஓராண்டிற்கு மேல் தேவையான அரிசி இருப்புக்கள் சுமார் 35 உணவுக்கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இவைகளில் சுமார் 1 இலட்சம் டன் அரிசி சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் சில சில்லறை அங்காடிகளைப் பார்வையிட்டு சரக்குகள் சுத்தமாகவும், தரம் மிகுந்ததாகவும் இருப்பதையும், அவைகள் சிறந்த முறையில் விநியோகம் செய்யப்படுவதையும் கண்டறிந்து பாராட்டியுள்ளார்கள். பாராட்டுதலுக்குரிய செயலில் செயல்பட்டு வரும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணிகளை எல்லாரும் பாராட்டத்தான் வேண்டும்.

## 'இல்லை' என்ற சொல்லே இல்லை!

கார்டுதாரர்கள் கேட்கின்ற நேரத்தில் 'சரக்குகள் இல்லை' என்ற சொல்லுக்கே இடமின்றி அவைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கெனப் 'புகார்ப் பிரிவு' ஒன்றும் சிறப்பாகச் செயல்பட்டு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் நுகர்பொருள் வழங்குவதில் இருந்து வந்த சிக்கல்களில் பல ஜனாதிபதி ஆட்சி அமலுக்குப் பின்னர் வெகுவாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன.

அரிசிகளின் 'விலைகளும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 16-3-76 முதல் சன்னரக அரிசி கிலோவுக்குப் 10 காசுகளும், மோட்டாரக அரிசி கிலோவுக்கு 30 காசுகளும், ஆந்திரா அரிசி கிலோவுக்கு 25 காசுகளும் குறைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. மொத்தக் கொள்முதலையும் அரசுச் சார்பான இக்கழகமே மேற்கொண்டுள்ளதால் வெளிச் சந்தையில் தானாகவே எல்லாப் பொருட்களின் விலைகளும் குறைகின்றன-குறைக்கப்பட்டு வருகின்றன.

உணவுப் பொருட்களைக் கார்டுதாரர்களுக்கு மட்டும் விநியோகிக்கவில்லை. மருத்துவமனை, கல்வி நிலையங்கள், மாணவர் விடுதிகள் போன்ற பல்வேறு பொது நிலையங்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. இன்றியமையாப் பொருட்களைத் தேவையான அளவிற்கு இவைகளுக்கு வழங்குகின்றது. தவிர, சிற்றுண்டிச் சாலை, தனியார் உணவு விடுதிகளுக்கும் தேவையான உணவுப் பொருட்களை வழங்கி உணவுப் பண்டங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது.

மாணவர் விடுதிகளுக்கென இன்றியமையா உணவுப் பண்டங்களை இக்கழகம் வழங்கி வருவதன் மூலம் ஏறத்தாழ 35,782 மாணவர்களைக் கொண்ட 574 அரிசன மாணவர் விடுதிகளும், 16,322 மாணவர்களைக் கொண்ட 23 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளும் பயன்பெற்று வருகின்றன.

## பற்றுக்குறை பறந்தோட.....!

கூட்டுறவுத் துறையின் மேற்பார்வையில் இயங்கி வருகின்ற சில்லறைக் கடைகளில் நுகர்வோரின் தேவைக்கான சரக்குகள் எளிதில் கிடைத்திட வழி செய்துள்ளது. இதற்கென வட ஆர்க்கார்டு மாவட்டத்தில் சில்லறைக் கடைக்காரர்களுக்குச் சர்க்கரையை நேரிடையாக வழங்கும் பொறுப்பினை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு 'மண்டல மேலாளர்' நிருவாகத்தின்கீழ் செயல்படும் அலுவலகங்கள் வாயிலாக விநியோகம் நடைபெறுகின்றன.

தொடர்ந்து வருகின்ற பருவமழை 1974-75—ஆம் ஆண்டில் பொய்த்து விட்டதால் உணவுப் பொருட்களைப் பெறுவதில் மோசமான சூழ்நிலை தமிழகத்திற்கு உருவாகியது. மாநிலத்தில் என்றுமே காணப்படாத வறட்சியும் மேலோங்கியிருந்தது. உணவு உற்பத்தியில் எதிர்பார்த்த அள



வில் 2 மில்லியன் டன்கள் பற்றாக் குறை ஏற்பட்டு விட்டன. இந்திய அரசிடமிருந்து அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமெனத் தமிழக அரசு கேட்டுக் கொண்டதுடன், வட மாநிலங்களில் உபரியாக விளைந்துள்ள இடங்களிலிருந்து கொள் முதல் செய்வதற்கென நுகர் பொருள் வாணிபக் கழகத்தைத் தனது ஏஜெண்டாக நியமித்தது.

அரசினுடைய வேண்டுகோளின் பேரில் இக்கழகம் ஏறத்தாழ 67,856 மெட்ரிக் டன் அளவுள்ள உணவு தானியங்களை உபரியாக உற்பத்தியாகியுள்ள வட மாநிலங் களிலிருந்து இறக்குமதி செய்து பற்றாக்குறையினைத் தீர்த்திட வழி வகுத்தது. தகுந்த நேரத் தில் தேவையான நடவடிக்கை களை எடுத்து வெளிச்சந்தை யிலும் உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. கட்டுப் படுத்தப்பட்ட விலைகள் வறட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வாங்கும் சக்திக்குட்பட்டே இருந்தன.

வெளிநாடுகளிலிருந்து 'கேர்' நிறுவனம் போன்றவைகளின் மூலம் பெறப் பெற்ற உணவுப் பொருட்களை வறட்சியால் வாடும் மக்களுக்கு வழங்கும் பணியில் துணை புரிந்ததும் குறிப்பிடத் தக்கதே.

இத்தகு பணிகளையும் நட வடிக்கைகளையும் சிறப்பான முறையில் செயலாற்றி வரும் இக்கழகம் நிருவாக இயக்குநர் மேற்பார்வையில் இயங்கி வரு கின்றது. இக்கழகத்தின் பல் வேறு துறைகளில் ஏறத்தாழ 7,500 பேர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## நாட்டுக்கு நன்மை தேடுவது !

வாணிப முறைகளுக்கும், மற்ற பராமரிப்புச் செலவுகளுக்குமென இக்கழகம் ரிசர்வ் பாங்கிட மிருந்து கடனுதவியும் பெற்று வருகின்றது. இன்றைய நாளில் இந்தியாவிலேயே பாங்கி முறை களில் அதிக அளவில் கடனுதவி பெறுகின்ற நிறுவனங்களில் நான் காவது இடத்தைப் பெற்றுள்ளது.

1972-73-ஆம் ஆண்டில் சிறிய அளவில் உருவாக்கப் பெற்ற இக் கழகம் இப்பொழுது மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது என்றால் மிகையாகாது.

ஆண்டுக்காண்டு விற்பனையில் பெரும் வளர்ச்சியையும் கண்டு வருகின்றது. 1972-73-ஆம் ஆண்டில் 11.82 கோடி ரூபாயும், 1973-74-ஆம் ஆண்டில் 49.72 கோடி ரூபாயும், 1974-75-ஆம் ஆண்டில் 98.38 கோடி ரூபாயும், 1975-76-ஆம் ஆண்டில் 188.47 கோடி ரூபாயும் என்ற அளவில் விற்பனை வளர்ச்சியைப் பெற்றுள் ளது. 1975-76-ஆம் பட்ஜெட் ஆண்டில் ரூ. 215.90 கோடி ரூபாய் விற்பனையை எட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற் பொழுதுள்ள விற்பனையானது மாநிலங்களிலுள்ள பொதுத் துறை நிறுவனங்கள் பெறுகின்ற சராசரி விற்பனையைக் காட்டிலும் அதிகமானது என்பதும் குறிப் பிடத்தகுந்த ஒன்றுதான்.

மொத்தத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 7 மணி நேரம்தான் பணியாற்று வது போலத் தோன்றினாலும், உண்மையில் நாள் முழுவதும் பணியாற்றுகிறது — நாட்டுக்கு நன்மை தேடித்தரும் நமது நண்ப னாகவும் விளங்குகிறது. பிரதமர் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டத்தை முனைந்து செயல் படுத்தும் பொறுப்பைத் தனது கடமையாகக் கொண்டிருக்கிறது! அனைவரும் பாராட்டும் வண்ணம் கடமை ஆற்றுகிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

—ஆயிரராமன்





# தொழில் தொடங்குவோருக்கு ஒரு தோழன்!

சென்னை கிண்டி இரயில் நிலையத்துக்கு எதிரில், கிண்டித் தொழிற்பேட்டையின் முகப்பில் காட்சியளிக்கிறது 'தொழில் நுட்பத் தகவலகம்' (Technical Information Section)

தொழில் வணிகத் துறையின் சார்பில் (Industries and Commerce) செவ்வனே இயங்கிவரும் இத் தொழில் நுட்பத் தகவலகம் தொழில் தொடங்க முனைவோர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் தேவையான தகவல்களை வழங்கி வருகின்றது. இது 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

**தொழில் தொடங்குவோருக்கு உற்ற தோழன்!**

'புதிதாக ஒரு தொழில் தொடங்க வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்று மூளையைக் குழப்பிக் கொள்வோருக்குத் தெளிவை உண்டாக்கித் தேவையான தகவல்களை வழங்குவதே இதன் தலையாய பணியாகும்.

சிறு தொழில் அமைக்கும் முறை, தொழில் வணிகத் துறையில் பதிவு செய்யும் முறை, தொழில் நடத்துவதற்கான தொழிற்பேட்டை விவரங்கள், தவணைக் கொள்முதல் முறையில் இயந்திரங்களை வாங்குதல், வங்கிகள் மூலம் உதவி பெறுதல், மூலப் பொருள்களின் இருப்பு போன்ற பல்வேறு தகவல்களை அளித்துத் தொழில் தொடங்குவோருக்கு உற்ற தோழனாக இருந்து வருகின்றது.

இத்தொழில் நுட்பத் தகவலகத்தில் பல பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அவை : 1. நூலகப் பிரிவு, 2. மொழி பெயர்ப்புப் பிரிவு, 3. ஆவணக் காப்பகப் பிரிவு, 4. வெளியீட்டுப் பிரிவு, 5. திரைப்படப் பிரிவு, 6. பொருட்காட்சிப் பிரிவு.

**நூலகமென்னும் அறிவாலயம்!**

அறிவு வளர்ச்சிக்கு வழிகோலும் சாதனங்களில் நூலகமும் ஒன்று என்பதை நாமறிவோம்.

பல்வேறு துறைகள் பற்றிய நூல்கள், பல்சுவை இதழ்கள் நிறைந்த நூலகம், மனிதனை நல்வழிப்படுத்தும் அறிவாலய மன்றோ?

சென்னை நகரில் நூலகங்களுக்குக் குறைவில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரு வகையில் சிறப்புப் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இந்தத் தொழில் நுட்பத் தகவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப நூலகமானது, தொழில் தொடங்க முனைவோருக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கி வருகின்றது. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் போன்ற பல பிரிவுகளைச் சார்ந்த ஏராளமான நூல்கள் இங்கே இருக்கின்றன. தற்போது இந் நூலகத்தில் ரூ. 1.46 இலட்சம் மதிப்புள்ள 4,000 நூல்கள் இருக்கின்றன.

தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் உதவி புரிவதற்கெனத் தொழில் சம்பந்தப்பட்ட 135 (வெளிநாடு மற்றும் உள்நாடு) இதழ்களுக்கு இந்நூலகம் சந்தா செலுத்தி வருகின்றது.

இந்த இதழ்களின் பழைய நூல்கள் ஆண்டுத் தொகுதிகளாக பிணைக்கப்பட்டு உடனடித் தேவைக்கு வைக்கப்பட்டுள்ளன. சிறு தொழில் தொடங்குவோருக்கு வேண்டிய திட்டத் தொகுப்புகள் முதலியன பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 1,961 தொகுதிகள் பிணைத்து வைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமா? இந்நூலகத்தில் நன்கு தேர்ந்தெடுக்கப் பெற்ற ஆராய்ச்சி நூல்கள், திட்ட அறிக்கைகள், சிறு தொழில் திட்ட தொகுப்புகள், இயந்திர அமைப்பு நூல்கள் முதலியனவும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



நூலகத்தின் ஒரு பகுதி



## நூலகத்திலுள்ள பத்திரிகைகள் பிரிவு

இந்த நூலகம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் (Indian Standard Institution) நிரந்தர உறுப்பினராக இருந்து வருகின்றது. இதனால் தர நிர்ணய நிறுவனத்தாரால் வெளியிடப்படுகின்ற அனைத்து தர நிர்ணய குறியீடுகளும் இலவசமாகக் கிடைக்கப் பெறுகிறது. இது வரையில் 7,142 குறியீடுகள் கிடைக்கப் பெற்று வாசகர்களின் உடனடிப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலகத்திற்கு நாள் தோறும் சுமார் 100 பேர் வருகின்றனர். நூல்கள் உள்ள பிரிவிலும், இதழ்கள் உள்ள பிரிவிலும் உட்கார்ந்து தொழில் நுணுக்கக் குறிப்புகளை ஆழ்ந்து படிப்போரையும், விரைந்து குறிப்புகளை எழுதிக் கொள்வோரையும் நாம் பார்க்கலாம்.

இந்த அரிய நூலகம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும், சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பகல் 1 மணி வரையும் திறந்திருக்கும். ஞாயிறு விடுமுறை.

### மொழி பெயர்ப்புப் பிரிவின் மேலான பணிகள்

தொழில் நுட்பத் தகவலகத்தின் மொழி பெயர்ப்புப் பிரிவு, தொழில் வணிகத் துறை சம்பந்தமான தகவல்களை மொழி பெயர்த்து சிறு சிறு வெளியீடுகளாக வெளியிடத் துணை புரிகின்றது. தொழில் தொடங்குவோர் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இப்பிரிவினர் தொழில் நுணுக்கங்களை எழுதித் தருகின்றனர்.

### ஆவணக் காப்பகத்தின் ஆக்கப் பணிகள்

தொழில் நுணுக்கக் குறிப்புகளைச் சேகரித்துப் பாதுகாப்பது இதன் பணியாகும். மேலை நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் தொழில் நுட்ப இதழ்கள், நூல்கள் முதலானவற்றிலுள்ள அரிய குறிப்புகளை எடுத்துப் பாதுகாத்து வருகின்றது இப்பிரிவு. இதனால் தொழில் தொடங்குவோர் எப்பொழுது வேண்டுமானாலும் அந்த குறிப்புகளைப் படித்துப் பயன் பெற முடிகிறது.

### வெளியீட்டுப் பிரிவின் விரைவான பணி!

சிறு தொழில் மற்றும் பெருந் தொழில்கள் சம்பந்தமான வெளியீடுகளை வழங்குவது இப்பிரிவின் பணியாகும்.

சிறு தொழிலதிபர்களுக்குரிய கையேடு, தமிழகத்தின் கனிவளங்கள், தகவல் குறிப்புகள் முதலானவை இப்பிரிவில் வெளியிடப் பட்டுள்ளன. 'தமிழ் நாட்டில் மின்னணுத் தொழில்கள்', 'தமிழ் நாட்டில் மின்சாரத் தொழில்கள்' 'தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்கள்' மற்றும் ''சிறு தொழில்களுக்கு உதவி'' ஆகிய தொகுப்புகள், தொழில் வணிகத் துறையின் மாநில நிருவாக அறிக்கைகள் ஆகியவையும் வெளியிடப்பெற்றுள்ளன.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முழுத் தகவல்கள் அடங்கிய வெளியீடுகளை வெளியிடுவதில் இப்பிரிவு விரைந்து பணியாற்றி வருகின்றது.

### சிந்தை மகிழ்விக்கும் திரைப்படங்கள்

தொழில் சம்பந்தமான தகவல்களைப் புத்தகங்களிலிருந்து படித்துத் தெரிந்து கொள்கிறோம். அதற்கு இங்குள்ள நூலகம் பெருமளவில் பயன்படுகிறது.

புத்தகங்கள், பத்திரிகைகள் தவிர தொழில் நுணுக்கங்களை நேரில் கண்டு தெரிந்து கொள்வதற்கும்கூட இங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் நுட்பத் தகவலகக் கட்டடத்திலேயே அழகிய ஒரு 'மினி' திரையரங்கு உள்ளது. அதில் வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்து பெறப்படுகின்ற தொழில் நுட்பம் சம்பந்தமான திரைப் படங்கள் தொழிலாளர்களுக்குக் காட்டப்படுகின்றன. வாரம் இருமுறை காட்டப்படும் இத் திரைப்படங்களைத் தொழிலாளர்கள் திரண்டு வந்து கண்டு களிக்கின்றனர்.

### எத்தனை எத்தனைப் பொருள்கள் இங்கே!

கிண்டித் தொழிற்பேட்டையில் பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் பெருமளவில் உள்ளன. இத்தொழிற்கூடங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொழிலாளர்களின் கை வண்ணத்தால் உருவாகும் கண்கவர் பொருள்களை நாம் கண்டு மகிழ வேண்டாமா?

கிண்டித் தொழிற்பேட்டையிலேயே ஒரு பொருட்காட்சி இருக்கிறது. இது நிரந்தரப் பொருட்காட்சி! விடுமுறை நாட்கள் தவிர எப்பொழுது வேண்டுமானாலும் இப்பொருட்காட்சிக்குச் சென்று தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் கைவண்ணத்தைக் காணலாம்.

1957-ல் அமைக்கப்பெற்ற இந்தப் பொருட்காட்சியில் இரும்பு, கண்ணாடி, தோல், மரம், துணி, காகிதம் முதலியவற்றால் ஆன சிறிய பெரிய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள பல மாநிலத்தவரால் பார்த்துப் பாராட்டப் பெற்றது இப்பொருட்காட்சி!

சிறு தொழில் சிறந்திட, பெருந் தொழில் பெருகிட ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் தொழில் வணிகத் துறையின் 'தொழில் நுட்பத் தகவலகம்' உண்மையில் நமக்கெல்லாம் ஒரு தோழனே!

— பி. வி. கிரி

மகளிர் பகுதி

# சிறுதானியத் தயார் நிலைக் கலவைகள்



**சோ**ளம், ராகி, கம்பு, திணை போன்ற சிறு தானியங்கள் தமிழ் நாட்டில் விளைகின்றன. இவை உடம்புக்கு சக்கி அளிப்பதோடன்றி, புரதம், உப்புச் சத்து, உயிர் சத்துள்ளவையாகவும் இருக்கின்றன. இத்தகைய ஊட்டங்களிருப்பினும், இச்சிறுதானியங்கள் சிறுபான்மையான மக்களால் மட்டும் உட்கொள்ளப்படுகின்றன. சிறு தானியங்கள் சத்துள்ளவையாய் இருப்பதால், மக்கள் தம் அன்றாட உணவில் இவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம். மேலும், இதனால் அரிசி, கோதுமை, போன்ற தானியங்களில் தட்டுப்பாடும் குறையும். இக்காரணங்களினால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு நுண்ணியல் துறை, சிறுதானியங்களைக் கொண்டு, பலவிதமான, சுலபமான, சத்துள்ள, சுவை மிக்க உணவுப் பண்டங்களின் செய்முறைகளை முறைப்படுத்தியுள்ளது. மேலும் பெண்களால் உணவுப் பண்டங்களை எளிதாகச் செய்யக்கூடிய வகையில். திணை, வெள்ளை ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றிலிருந்து தயார் நிலைக் கலவைகளைச் செய்து சனவரி மாதம் நாலாம் தேதி உழவர் நாள் விழாவில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தயார் நிலைக் கலவைகளுடன் குறிப்பிட்ட அளவு நீர் மட்டும் கலந்து உணவுப் பண்டங்கள் செய்துவிடமுடியும். இவ்வகைத் தயார் நிலைக் கலவைகள் 250 கிராம், 500 கிராம் என்ற அளவில் கிடைக்கின்றன.

250 கிராம் திணை முறுக்குக் கலவையில் சுமார் 965 கலோரி சக்தியும், 26 கிராம் புரதமும், 28 மில்லி கிராம் இரும்புச்சத்தும் உள்ளன.

மக்காச் சோளப் பணியாரக் கலவை, சுமார் 17.5 கிராம் புரதமும், 900 கலோரி சக்தியும், அளிக்கும்.

வெள்ளை ராகி 'தோசைக் கலவை'யில் புரதம், உப்பு, உயிர்ச் சத்துக்கள் ஆகியவை நிறைந்துள்ளன. இதில் சுமார் 760 கலோரி சக்தியும், 38 கிராம் புரதமும், 720 மில்லி கிராம் சுண்ணும்புச் சத்தும், 17 மில்லி கிராம் இரும்புச் சத்தும், 1.0 மில்லி கிராம் உயிர் சத்து .பி. 1-ம், 3 மில்லி கிராம் மியாசினும் உள்ளன.

250 கிராம் அளவுள்ள திணை முறுக்கு தயார் நிலைக் கலவை ஒரு ரூபாய், வெள்ளை ராகி தோசைக் கலவை 85 பைசா, மக்காச் சோள பணியாரக்கல்வை 65 பைசா என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்தில் விற்கப்படுகின்றன.



# செய்தியும் சித்திரமும்





1976-77-ஆம் ஆண்டில் 12.64 கோடி
ரூபாய்ச் செலவில் மருதா நதி, குடகனாறு,
வட்டமலைக்கரை ஓடை, பாலாறு—
பொருந்தலாறு ஆகிய 4 பாசனத் திட்
டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும்.
இத்திட்டங்களின் மூலம் 17,230 ஏக்கர்
நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்.
''ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்!''
''இனிமேல் நாங்கள் அடிமைகள் அல்ல!''
நீலகிரி மாவட்டம் கூடலூர்
வட்டத்தில் கொத்தடிமைகளாக
அவதியுற்று வந்த பனியர்
என்ற பழங்குடியினர்
அடிமைத்தளையில் இருந்து
விடுவிக்கப் பட்டுள்ளனர்.
பேச்சைக் குறைப்பீர்!
பெருக்குவீர் உழைப்பை!



# வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தோம்!



—கவிஞர் எஸ். டி. சுந்தரம்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்துவான்புகழ் கொண்ட பெருமைதன்னை
தெள்ளுதமிழ்க் கவி தேனெனப் பாடினன் தேர்ந்திவ்வுலகம் வியந்திடவே
அள்ளிப் பருகிடும் ஆற்றுநீரைப் போல வள்ளுவர் நீதியை வாய்மைதனை
உள்ளத்திலே எண்ணி உயிரெனப் போற்றிடில் உயர்ந்திடலாம் இன்ப
வாழ்க்கையிலே.

'அ' என்ற உயிரொலிபோல் அசைகின்ற மெய்ப்பொருள்போல்
அகிலமெல்லாம் அசைவிக்கும் ஆதிபரம் பொருள்ஒன்றை
அய்யன் பொதுமறையில் அன்பான சக்திதனை
மெய்யாகச் சொல்லியதை மேதினியில் உணர்ந்தோமா?

ஒன்றான மெய்ப்பொருளை உணராமல் உலகத்தில்
நன்றான பொதுமறையை நாடாமல் நவிலாமல்
அன்றாடம்சண்டையிலே ஆயிரமாம் பொய்மையிலே
திண்டாடும் மானிடர்க்குத் திருக்குறளே காப்பாகும்.

வான்மழையே அமுதாகும் வயல்வரப்பு நிறைவாகும்
கூன்மனத்தை விட்டுவிட்டு கூடுவதே தொழிலாகும்
நான்என்னும் உயிர்யாவும் நலமோங்கி நிலைபெருக
வான்மறையின் வள்ளுவரின் வாய்மைதனைக் கேட்டோமா?

தீமைமிகு சோம்பலிலும் தேவையில்லா வேலையிலும்
ஆமையெனத் தூங்கியபின் அநியாயம் ஆனபின்னர்
ஊமைகண்ட கனவாக உண்மைதனைச் சொல்லாமல்
ஏமாந்த உலகுக்கு இம்மறையே மருந்தாகும்!

கண்டதெல்லாம் கற்காதே கற்கும்நூல் தேர்ந்து எடு
கண்ட கண்ட ஏடுகளை கண்ணவியப் படிக்காதே



கண்போன்ற பெருநூலை கருத்தாகப் படித்தவற்றில்
கண்டுள்ள நீதிகளை கடைப்பிடிக்கச் சொல்லுகிறார்!

இன்றுவரை அவர் செயலை ஏற்றோமா வாழ்க்கையிலே
அன்பான அறவாழ்வே அழகான வீடென்றார்
துன்பச் சுமைக்கெல்லாம் தூயவழி காட்டுகிறார்!
பண்போடு அவர் போட்ட பாதையிலே நடந்தோமா?

படித்தறிவு பெறுவதுவும் பதவிகளைப் பெறுவதுவும் (ஊரை)
அடித்துலையில் போடுகின்ற அறிவெல்லாம் அறிவல்ல
துடித்ததொரு தூயபொருள் தொல்லருளைக் காண்பதற்கே
படித்த பெரும் அறிவெல்லாம் பயனுக வேண்டுமென்றார்.

எடுத்த எடுப்பினிலே இன்பம் வர வேண்டுமென
கெடுத்தபழ மந்திரத்தால் கிடைக்காது இடையின்றி
தொடுத்த முயற்சியிலே தொடர்ந்துவரும் இன்பமென
அடுத்தடுத்துச் சொன்னாரே அவர்குரலைக் கேட்டோமா?

கள்ளைக் குடிக்காதே கவலையிலே மடியாதே—
தள்ளாடித் தெருவினிலே தடமாறிப் போகாதே—
உள்ளத்தை ஒளிக்காதே உயிர்மானம் இழக்காதே—
தள்ளிவிடு குடியென்றார் தமிழ்மறையைக் கேட்டோமா?

நல்ல பெரியவர்கள் நாலுபேர் உன்னையொரு
நல்லவன்தான் எனச்சொல்லும் நல்லநிலை வேண்டுமெனில்
பொல்லாக் குடியதனைப் போக்கிவிடு மானிடனே!
இல்லாவிடில் உலகில் இறந்தவனைப் போலாவாய் !

என்றுபல சொன்னரே இதயத்தை விரிவாக்க
குன்றின் விளக்காக குன்றாத ஒளியானர்
அன்றுமுதல் இன்றுவரை அவர்சொன்ன திருக்குறளை
ஒன்றேனும் செய்தோமா உத்தமர்கள் ஆனோமா?

சொல்லுகிறோம் நீதிகளை சொன்னபடி நடப்பதில்லை
தில்லுமல்லு செய்கின்றோம் திருக்குறளின் விற்பனையில்
மெல்லுகிறோம் வெறும்வாயை மேலான உண்மைகளை
நெல்லுமிபோல் நீக்குவதால் நெல் முளைப்பதில்லையிங்கே!

* * * * *

ஆலமாமரத்தினது அகன்றதொரு தன்மையினை
ஆலஞ்சிறுவிதையில் அடக்குவித்த விந்தையென
ஞாலத்தின் நியதிகளை நயமான நீதிகளை
சின்னஞ் சிறுகுறளில் சேமித்தார் வள்ளுவனர்.

சாலமோன் சாக்ரடீஸ் சாணக்கியர் சுக்கிரனர்
சான்றோர்க்கும் உயர்வாகச் சாற்றுகிறர் பொதுமறையை
காலமெலாம் நிலைபெருகும் கருத்தின்பப் பாற்கடலை
கண்ணுன குறள்வழியை கண்டுவகை பெற்றிடலாம்.

எல்லாக் காலத்தும் எத்தகைய நாட்டார்க்கும்
இல்லாத ஏழைக்கும் இருக்கின்ற மேதைக்கும்
எல்லா மதத்தார்க்கும் எண்ணில்லா இனத்தார்க்கும்
எல்லா மொழிபேசும் எண்ணரிய ஊரார்க்கும்

வில்லாண்ட வேந்தர்க்கும் விளையாடும் பாலர்க்கும்
மல்லாண்ட வீரர்க்கும் மல்லிகைப்பூ மாதர்க்கும்
கல்லாத மாக்கட்கும் கற்றறிந்த மந்திரிக்கும்
காலமெலாம் பயன்விளைக்கும் கருவூலம் உலகமறை!

* * * * *

உள்ளம் உனதில்லம் உலகம் ஊர்எல்லாம்
கள்ளம் கவடின்றி கனிவாய் வாழ்ந்துயர
தெள்ளிய சிந்தனையின் தேனும் திருக்குறளை
அள்ளித் தந்தவர்காண் ஆசான் வள்ளுவனர்.

பிள்ளைப் பருவமதில் பெரியவர் உருவமதில்
பள்ளிப் பயிற்சியதில் பல்கலைக் கழகமதில்
வள்ளுவர் குறள்கேட்டு வழியில் நடந்தார்க்கு
உலகம் வசமாகும் உள்ளம் உயர்வாகும்











நல்லது செய்வதுவே நாகரிகம் என்பார்
கொல்லும் கொடுமைகளும் கோணல் குறும்புகளும்
வெல்லும் வழியாவும் வெற்றிப் பொருள்யாவும்
மெல்லச் சொல்லுகிறர் மேதகு வள்ளுவனர்.

சில்லரை ஆயிடினும் செல்லும் காசதுபோல்
சின்னஞ் சிறுபொருளும் செம்மை நலம்பெறவே
எல்லை வகுத்தார் நாம் எளிதாய் வாழ்ந்திடவே
தொல்லை தீர்த்தருளும் தோழர் வள்ளுவனர்.

மல்லிகைத் தோட்டமதில் மணமதை நுகராமல்
முள்ளின் முடைநாற்றம் முகரா தீர்எனவே
வள்ளுவர் தெள்ளமுதில் வழங்கும் வான்தமிழன்
வெள்ளக் கருணையிலே வேட்கை தீர்ந்தோமா?

நெல்லிக் கனிதந்தார் நெறிஞ்சியைத் தின்னுகிறோம்
நெல்லாம் பயிர்தந்தார் நிதம்மண் தின்னுகிறோம்
எல்லாப் பொருள்தந்தும் ஏழைப் பதரானோம்
நல்லவர் வள்ளுவனர் நட்பை அறிந்தோமா

கற்பனைப் பாட்டல்ல காணு மருந்தல்ல
கற்பகச் சோலையிலே கனிரச விருந்திதுகாண்!
கற்றிட மனமுயரும் கருதிட அறிவுயரும்
மற்றதன் படிநடந்தால் மாண்புறு வாழ்வுயரும்!

சின்னஞ் சிறுவடிவம் சீரகச் சம்பாபோல்
அன்னப் பறவைபோல் அறிவின் திறம்பெருகும்
மின்னல் சிறுகீற்றல் மேதினி இருள்தீர்க்கும்
கன்னல் தமிழ்அறிவின் கனமழை குறள்அமுதம்!

இன்னும் வாழ்க்கையிலே இன்குறள் ஏற்காமல்
சொன்னதைச் சொல்லுகிறோம் சொற்பொழி வாற்றுகிறோம்!
என்னே பேதமைநாம் ஏமாந்திருக்கின்றோம்!
கண்கள் இருந்தும்நாம் காணுக் குருடர்களா?

குருடனும் உணருகிறன் குணநலம் பெறுகின்றன்
திருடனும் திருந்துகிறன் தீமையும் குறைகிறது
அறிவுடன் பேசுகிறோம் ஆனல் செய்வதில்லை
நெறியில் தவறுகிறோம் நீளிருளில் வீழுகிறோம்!

உரைகள் எழுதுகிறோம் ஓங்கிக் கதறுகிறோம்
விரைவில் விற்கின்றோம் விளம்பரம் பெறுகின்றோம்
திருக்குறள் பணத்தாலே தீமைகள் செய்திடுவோம்
செருக்கினைப் பெருக்குகிறோம் செந்தமிழ்ப் பயனிதுவா?

உருக்கும் உள்ளமதை உணர்வின் ஒளியேற்றும்
கருக்கும் காரிருளை கலகம் தீர்த்தருளும்
பெருக்கும் புதுவாழ்வை பேரருட் சூரியனும்
சிறக்கும் குறவள்வழியே சென்றல் சீர்பெறுபோம்!



மாணவர் அரங்கம்

# விக்கலும் தும்மலும் தோன்றுவது ஏன்?

"**போ**ருள்கள் மூன்று வகைப் படும் : அவை திடப்பொருள், திரவப் பொருள், வாயுப்பொருள் எனப்படும் திடப் பொருளுக்கு உதாரணம்—தங்கம், வெள்ளி ; திரவப் பொருளுக்கு உதாரணம்—நீர் ; வாயுப் பொருளுக்கு உதாரணம்—நீரக வாயு, உயிர் வாயு ஆகியவை''.

இவ்வாறு விஞ்ஞான ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந் தார். அந்த வகுப்பறையிலிருந்த 38 பையன்களும் ஆசிரியரின் விளக்கத்தைக் கேட்டுக் கொண் டிருந்தார்கள். ஆனால் ராமுவும், சோமுவும் பாடத்தைக் கவனிக் காமல் ஏதோ பேசிக் கொண் டிருந்தார்கள். அவர்களைக் கவ னித்து விட்ட விஞ்ஞான ஆசிரி யருக்குக் கோபம் வந்துவிட்டது.

''ராமு! சோமு! பாடத்தைக் கவனிக்காமல் நீங்கள் இருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறீர் கள்?" என்று கடுமையான குரலில் கேட்டார் ஆசிரியர்.

ராமு பதில் சொல்ல முயன் றான்; முடியவில்லை. அதற்குள் 'விக்கல்' அவனைப் பேச விடாது தடுத்துவிட்டது. உடனே சோமு பதில் சொன்னான் :

''ஐயா! ராமுவுக்கு விக்கல் ஏற்பட்டது ; கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்! 'விக்கல் ஏன் ஏற்படுகிறது?' என்று என்னிடம் கேட்டான்! உடனே, எங்கள் வீட்டில், எங்கள் பாட்டி என்னி டம் சொல்லிய காரணத்தை நான் ராமுவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன்; அப்போது தான் தாங்கள் அழைத்தீர்கள்! எழுந்து விட்டோம்''.

''சரி, விக்கல் எதனால் ஏற்படு கிறது என்று உன் பாட்டி தெரி வித்தார்களா?''

''ஐயா, நமக்கு வேண்டிய உற வினர்களாவது, நண்பர்களாவது நம்மை நினைத்தால் விக்கல் ஏற் படும் என்று என் பாட்டி சொன் னார்கள்!''

''சோமு! இந்த விஞ்ஞான யுகத்தில் வாழ்கின்ற நீ—அதிலும் விஞ்ஞானத்தை விருப்பப் பாட மாகப் பயிலும் நீ—பாட்டி சொல் லும் பழங் கதைகளை நம்பலாமா? பிறர் நம்மை நினைப்பதால் விக்கல் ஏற்படுவதில்லை! அவ்வாறு சொல்வது அறியாமை."

''அப்படியென்றால் விக்கல் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன ஐயா?''

"மாணவர்களே! தற்பொழுது உங்களுக்கு நடத்த வேண்டிய பாடத்தை நிறுத்தி விட்டு, விக் கள் ஏற்படுவதற்குரிய கார ணத்தை விளக்குவது நல்லது எனக் கருதுகிறேன்!''

''மிகவும் நன்றி ஐயா! அருள் கூர்ந்து விளக்கம் செய்யுங்கள்''—சோமு கூறினான். ராமு தானும் அதனை ஆமோதிப்பதைத் தனது 'விக்கல்' குரல் மூலம் தெளிவு படுத்தினான்!

ராமுவையும், சோமுவையும் இருக்கையில் அமருமாறு சொல்லி விட்டு, விஞ்ஞான ஆசிரியர் 'விக்கலை'ப் பற்றி விளக்கவுரை நிகழ்த்தினார்.

''மாணவர்களே! 'நல்லார் ஒருவர் பொருட்டு இந்த உலகத் துக்கே மழை கிடைக்கிறது.'' என்று ஒரு தமிழ் செய்யுள் தெரி விக்கின்றதல்லவா? அது போல, இன்று ராமு ஒருவனுக்கு ஏற் பட்ட சந்தேகத்தால், உங்கள் அனைவருக்கும் விளக்கவுரை கிடைக்கப் போகிறது! எனவே அனைவரும் கவனமாகக் கேளுங் கள். . . .

''மனித உடல், பலவகையில் விந்தையான அமைப்புக் கொண் டது. சதை, எலும்பு, நரம்பு, இரத்தம் ஆகிய பல்வேறு பகுதி யால் ஆகியது உடல். நுரை யீரல், இருதயம், சிறுநீரகம், கல் லீரல் போன்ற நுட்பமான உள் ளுறுப்புக்கள் கொண்டது நமது உடல்; நாடித் துடிப்பு, மூச்சு, இரத்த ஓட்டம், போன்ற பல் வேறு இயக்கங்களுக்குக் கட்டுப் பட்டது நமது உடல் ; நமது தொண்டை, காற்றுக் குழாய், உணவுக் குழாய் என்னும் இரு அமைப்புக்கள் கொண்டது ; ஒரு வழிக் கதவு என்று சொல்லப் படும் 'வால்வு' உணவுக் குழாயை யும், காற்றுக் குழாயையும் வேறு படுத்துகின்றது.

''இரு நுரையீரல்களுக்கு இடையில் காற்று உருவாகும் பகுதி உண்டு, இதற்கு 'உதர விதானம்' என்று பெயர். இந்த உதர விதானம் சில நேரங்களில் திடீரெனச் சுருங்குகிறது ; அவ்வாறு சுருங்கும்போது, ''உள் சுவாசம்'' ஏற்படுகிறது ; குரல் வளை திடீரென்று மூடிக் கொள்ள நேருகிறது ; அதனால் உள்சுவாசம் நீடிக்காமல் தடுக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையினால், 'விக்கல்' ஒலி உண்டாகிறது. சில வினாடி களில் இந்தச் சீர்கேடு இயற்கை யான முறையிலேயே மாற்றப் பட்டு விடுகிறது. இதற்கு மருத் துவச் சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படுவதில்லை.''

ஆசிரியர் விளக்கம் செய்தார்! அப்போது குமரேசன் என்னும் மாணவன் எழுந்தான்.

''ஐயா! பிறர் நம்மை நினைப்ப தால்தான் 'தும்மல்' ஏற்படு கிறது, புரையேறுகிறது என்றும் சிலர் சொல்கிறார்களே. அந்தக் கூற்று பொய்யா—மெய்யா என் பதையும் தெரிவிக்க வேண்டு கிறேன்!''

''குமரேசா! விக்கல் ஏற்படுவ தற்கு, சோமுவின் பாட்டி சொல் லியதைப் போலவே இதுவும் தவறான கருத்தே ஆகும்! விளக்க மாகச் சொல்கிறேன்!''

''நாம் சுவாசம் செய்யும்போது சில நேரங்களில் ஆழ்ந்த உட் சுவாசமும், வெளிச்சுவாசமும் ஒரே நேரத்தில் ஏற்படுகிறது. ஆனல் அப்போது குரல்வளை மூடியபடியே இருக்கிறது. உள்ளே உருவான காற்று வெளியே வருவ தற்குத் துடிக்கிறது ; குரல்வளை முடியபடி இருப்பதால் அக்காற்று வாய், மூக்கு ஆகியவற்றின் வழி யாக வெளியே வருகிறது. அப் போது ஒலி ஏற்படுகிறது ; நீரும் வெளிக் கொணரப்படுகிறது ; இதுதான் தும்மல் ஆகும்''.




''உணவுக் குழாய், மூச்சுக் குழாய் என இரு வகைக் குழாய் நமது கழுத்தின் உள்ளே இருப்ப தாக முன்பே குறிப்பிட்டேன். இரண்டும் வாயின் உட்பகுதியி லிருந்துதான் தொடங்குகின்றன. நாம் உண்ணும் உணவு மூச்சுக் குழாய்க்குள் சென்று விடாதபடி குரல்வளை தடுக்கிறது. சில நேரத் தில் நாம் அவசர அவசரமாகவும், பல்வேறு சிந்தனைகளுடனும், பதட்டத்துடனும் — பேசிக் கொண்டும் — உணவு உண்ணும் போது உணவுக் குழாய்க்குள் செல்லவேண்டிய உணவில் ஒருசில துணுக்குகள் மூச்சுக் குழாய்க்குள் சென்று விடுவதுண்டு ; மூச்சுக் குழாய் அந்த உணவுத் துணுக்கு களை ஏற்றுக் கொள்வதில்லை ; அங்குள்ள காற்று, அந்த உணவுத் துணுக்குகளை வெளியேற்றுகின் றது. அந்த நிகழ்ச்சிதான் புரை யேறுதல் எனப்படுகிறது!''

விஞ்ஞான ஆசிரியர் சொல்லி முடித்தார் : வகுப்பு முடிவுறுவ தற்கான மணியும் அடிக்கப்பட் டது.

''மாணவர்களே! பொருள் களின் மூன்று வகை நிலையைக் குறித்து நாளை சொல்கிறேன் ; இன்று இந்தப் பொது அறிவுப் பாடத்துடன் வகுப்பு முடிகிறது'' என்றார் ஆசிரியர்.

''பொது அறிவு மட்டுமல்ல ஐயா! புது அறிவும் ஆகும்!'' என்று சொல்லிய வண்ணம் மாண வர்கள் விடைபெற்று சென்றனர்.

—எஸ்.எஸ்

## இருபது அம்சத் திட்டத்தில் மாணவர்கள் பங்கு

**தே**சிய சேவைத் திட்டத் தின் '76–77-ஆம் ஆண்டுக் கான பணிகளில் கிராமச் சீரமைப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படும். 20 அம்சப் பொருளாதாரத் திட்டத் தில் முக்கியமான அம் சங்களைச் செயல்படுத்துவதில் மாணவர்களும் பங்குகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவே இவ்வாறு தீர்மானிக்கப்பட் டுள்ளது. நகர்புறங்களில் உள்ள சமுதாயத்தில் நலிந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட தாக. தேசிய சேவை அணித் தொண்டர்களின் பணிகள் அமைந்திருக்கும். மத்திய கல்வி அமைச்சகத்தின் தீர் மானத்தையொட்டி, வரும் விடுமுறைக் காலங்களில் நடைபெற விருக்கும் சிறப்பு மாணவர் முகாம் திட்டங் களின் மையக் கருத்து **''கிராமச் சீரமைப்பில் இளைஞர்''** என்ற தலைப்பில் அமைந்ததாக இருக்கும்.

இந்த மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த சேவை அணித் தொண் டர்கள், நிலச்சீர்த்திருத் தங்கள், தாமாகவே கல்வி கற்க முன்வருபவர்களுக்கு கல்வி கற்பிப்பது, சிறந்த சுற்றுப்புற சூழ்நிலைக்குத் திட்டமிடுவது, பொருளாதார முன்னேற்றம், குடும்பநலத் திட்டம், குழந்தை வளர்ப்பு, மரம் வளர்ப்பு போன்ற பணி களில் ஈடுபடுவார்கள். மேலும் அவர்கள், நிலச்சீர்த்திருத்தம் சம்பந்தமாக நிலத்தை 'சர்வே' செய்து மதிப்பீடு செய்வது, இதுவரைக் கொத் தடிமை முறையில் இருந்து தற்போது விடுபட்டுள்ள தொ ழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது. ஏழைகளுக்குச் சட்ட உதவி அளிப்பது, கல்வி கற்பிக்கும் திட்டங்களை துவக் குவது, சுற்றுப்புறச் சுகாதா ரத்தைப் பேணுவது, கூட்டு றவுச் சங்கங்கள் திறம்பட இயங்க உதவுவது போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள்.

மத்திய கல்வித்துணை அமைச்சர் திரு டி. பி. யாதவ் அவர்கள் 31-3-76—ல் மாநிலங்கள் அவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் இத் தகவல்களைத் தெரிவித் தார்.

* *



# பேரரசர் அக்பர் சென்னை வந்தார்!

பேரரசர் அக்பர் கடந்த 29—3—76 அன்று சென்னை வந்தார்! அவரைக் காண ஆயிரக் கணக்கானவர்கள் ஆர்வத்துடன் கூடியிருந்தனர்! அவர் இனிமேல் தொடர்ந்து வாரம் ஒரு முறை சென்னைவழியாக ஆஸ்திரிரேலியா நாட்டுக்குப் போய் வருவார்!

இச் செய்தி ஆச்சரியமாக இருக்கிறதா?

ஏர் இந்தியா நிறுவனத்தைச் சார்ந்த '' பேரரசர் அக்பர் '' என்னும் பிரமாண்டமான விமானம் சென்னைக்கு, முதன் முதலாக வந்ததைத்தான் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

**'போயிங்—746'** என்னும் வகையைச் சார்ந்த இந்த **'ஜம்போ ஜெட்'** விமானம் பம்பாயிலிருந்து புறப்பட்டுச் சென்னை வழியாக ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி வரை சென்று திரும்பும்.

இந்திய வரலாற்றில் பேரரசர் அக்பர் அவர்களுக்குப் பெருமை மிகுந்ததோர் இடம் உண்டு. இந்துக்களுக்கும், இசுலாமியர்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கிய பண்பாட்டுத் திலகம் ஆவார் அவர். கலைச் செல்வங்களைப் பேணிப் போற்றுகின்ற காவலராகவும் அவர் திகழ்ந்தார். அவருடைய தலைநகரான படேபூர் சிக்ரியில் காணப்படும் பல வகையான கலைக் கூடங்களும், சிற்பச் சின்னங்களும் சிதிலம் அடைந்து தென்பட்டாலும், அக்பரின் அளவில்லாத கலையார்வத்தை அவை இன்றைக்கும் பறைசாற்றுகின்றன.

'பேரரசர் அக்பர்' பெயரையே புதிய விமானத்துக்கு 'ஏர்-இந்தியா' சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

ஏனெனில், அக்பரின் கலையார்வத்தை நினைவுறுத்துகின்ற வகையில் விமானத்தின் உட்புறத்தில் கவர்ச்சி மிக்க எழிலோவியங்கள் பல, விழிகளுக்கு விருந்து படைக்கின்றன; பண்டைக் கால இந்திய வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன அந்தக் காட்சிகள். வயலிலே உழுகின்றவர்கள்—விளைந்த தானியங்களை மாட்டு வண்டிகளில் மூட்டைகளில் ஏற்றிச் சந்தைகளைநோக்கி விற்பனைக்குக் கொண்டு செல்கின்றவர்கள்—மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் ஆடிப் பாடுகின்ற ஆடவர்கள், ஆரணங்குகள் — முதலான கிராமப்புறச் சூழ்நிலைகளையெல்லாம் உணர்ச்சி பொங்க சித்திரிக்கின்றன அந்த ஓவியங்கள்.

குறிப்பாக மேல் தளத்தில் உள்ள **'மகாராஜா லவுஞ்ச்'** எனப்படும் ஓய்வுக் கூடம் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் ஓர் அரண்மனைக் கலைக் கூடமாகவே அமைந்து, பயணிகளைக் கவர்கிறது. நன்றாக அழகுபடுத்தப் பட்டுள்ள அதன் இடையே பொருத்தப்பட்டுள்ள கண்ணாடித் திரைகளில் தீட்டப் பெற்றுள்ள மரங்கள் மற்றும் பறவைகளின் தங்கச் சித்திரங்கள் சிந்தையைக் கவர்கின்றன.

ஓவியக் காட்சிகள் மட்டுமன்றி திரைப்படம் பார்க்கவும் உள்ளே வசதி செய்யப்பட்டுள்ளது.

கண்ணுக்கு விருந்து தருவதோடு நில்லாமல், காதுக்கும் அதனைப் பரிமாறுகின்ற வகையில் பயணிகளின் இருக்கைக்கு அருகே இசைக் கருவி யொன்றையும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் புதுமையான கருவியைக் காதிலே பொருத்திக் கொண்டால் மேனாட்டு இசை, கருநாடக இசை, இந்துஸ்தானி இசை, எல்லாவற்றையுமே கேட்டு இன்பத்தில் மிதக்கலாம்.

விமானத்தின் உட்புறம் ஒரு கலைப் பேழையாக விளங்குவதற்கு ஏற்பவே, வெளிப் புறத் தோற்றமும் கம்பீரமாகக் காணப்படுகிறது.

இதனுடைய மொத்த நீளம் 232 அடி (70.51 மீட்டர்கள்), உயரம்: 63 அடி (19.33 மீட்டர்கள்); இறக்கையின் நீளம்: 195 அடி (59.64 மீட்டர்கள்).

விமானத்தின் மொத்த எடை 3 இலட்சத்து 53 ஆயிரம் பவுண்டுகள். ஒரு மணிக்கு 580 மைல் (930 கிலோ மீட்டர்கள்) வரை பறக்கக் கூடிய இது, ஒரே மூச்சில் 4,800 மைல்கள் (7,730 கிலோ மீட்டர்கள்) வரை செல்லுமாம். வானத்தில் அதிக உயரமாக 45,000 அடி வரை இது பறக்க வல்லதாகும்.

பழைய போயிங்—747 விமானத்தில் 32 முதல் வகுப்புப் பயணிகளும், 321 சிக்கன வகுப்புப் பயணிகளும் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இந்தப் புதிய விமானமோ 24 முதல் வகுப்புப் பயணிகளையும், 329 சிக்கன வகுப்புப் பயணிகளையும் ஏற்றிச் செல்லக் கூடியது. இதன் மூலம், சிக்கன வகுப்புகளை நிறைய பேர் பயன்படுத்திக் கொண்டு பயணம் புரிய வேண்டும் என்கிற பெருநோக்கு புலனாகிறது.

இவ்வாறு பல்வேறு வசதிகள் படைத்துள்ள புதிய விமானத்தின் விலை 35 கோடி ரூபாய் ஆகும்.

சென்னை வழியாகச் செல்லும் இந்த விமானத்தில் ஏறித் தமிழக மக்கள் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு உல்லாசமாகச் சென்று வரலாம்.

கலைச் செல்வரான 'பேரரசர் அக்பர்' ( Emperor Akbar ) அவர்களின் பெயரினைப் பூண்ட இப்புதிய விமானம், விண்ணிலே நீந்திப் பறக்கும் வேகம் மிகுந்த ஊர்தி மட்டும் அன்று; இந்தியாவின் பெருமையை உயர்த்தும் கண்ணுக்கினிய கலைப் பெட்டகமும் ஆகும்!

—அ. வேதாசலம்.